தினபூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 176 வைகாசி 18
Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94
திருச்சி, ஞாயிறு, ஜூன் 01, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**அதிபர் ட்ரம்ப் அடுத்த அதிரடி: இறக்குமதி செய்யப்படும் இரும்புக்கு 50 சதவீதம் வரி**

...2-ம் பக்கம்

**பெண் சக்தியின் அடையாளமாக மாறி விட்டது ஆபரேஷன் சிந்தூர்: பிரதமர் நரேந்திரமோடி புகழாரம்**

...3-ம் பக்கம்

**பிளே ஆப் சுற்றில் அதிக ரன்கள்: மும்பை-குஜராத் அணிகள் இணைந்து புதிய சாதனை**

...6-ம் பக்கம்





● பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வற்காக மதுரைக்கு வருகை தந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நேற்று வில்லாபுரம் மற்றும் ஜெய்ஹிந்த்புரத்தில் வழிநெடுகிலும் பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

### உத்தங்குடி கலைஞர் திடலில் பிரம்மாண்ட ஏற்பாடுகள் தயார்:

### 47 ஆண்டுகளுக்கு பிறகு முதல்வர் ஸ்டாலின் தலைமையில் இன்று

# மதுரையில் நடைபெறுகிறது தி.மு.க பொதுக்குழு கூட்டம்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்

மதுரை, ஜூன் 01-

**47 ஆண்டுகளுக்கு பிறகு மதுரையில் இன்று தி.மு.க பொதுக்குழு கூட்டம் நடைபெறவுள்ளது. உத்தங்குடி, கலைஞர் திடலில் இதற்கான ஏற்பாடுகள் பிரம்மாண்டமாக செய்யப்பட்டுள்ளது. தி.மு.க. தலைவரும், முதல்வரமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இன்றைய கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர்கள் உள்ளிட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்கின்றனர்.**

**பிரமாண்ட பந்தல்....**

தி.மு.க.வின் பொதுக்குழு கூட்டம் இன்று (ஜூன் 1) மதுரையில் நடைபெறவுள்ளது. இதையொட்டி, உத்தங்குடியில் அமைந்துள்ள கலைஞர் திடலில் 90 ஏக்கரில் பரந்து விரிந்த பிரமாண்ட பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகள் கடந்த ஒரு மாதமாக மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் மற்றும் வருவாய் மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தியின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

**10,000 ஆயிரத்திற்கும்**

தி.மு.க. தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த பொதுக்குழு கூட்டத்தில், 6 ஆயிரத்து 500 பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என சுமார் 10 ஆயிரம் பேர் பங்கேற்க இருக்கின்றனர். பந்தலில் குளிர்சாதன வசதிகள், வண்ண விளக்குகள், பசுமை புல்வெளிகள், செயற்கை நீருற்றுகள் உள்ளிட்டவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நுழைவு வாயில், சென்னை அண்ணா அறிவாலயத்தை ஒத்த தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**100 அடி கொடிக்கம்பம்**



மதுரையில் நடைபெறவுள்ள தி.மு.க பொதுக்குழு கூட்ட அரங்கத்தின் முகப்பு, தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் போன்று அலங்கரிக்கப்பட்டுள்ள காட்சி.

பெரியார், அண்ணா, கலைஞர், மு.க.ஸ்டாலின் மற்றும் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் கட்-அவுட்கள், தி.மு.க. அரசின் சாதனைகளை சுட்டி காட்டும் பதாகைகள் மற்றும் 100 அடி உயர கொடிக்கம்பம் ஆகியவை அரங்கின் அமைப்பை கூட்டுகின்றன. இதில் பங்கேற்க முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று மதியம் 1 மணியளவில் விமானம் மூலம் மதுரை வந்தார். விமான நிலையத்தில் அமைச்சர் மூர்த்தி, தளபதி எம்.எல்.ஏ. மணிமாறன் உள்ளிட்டோர் தலைமையில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர் தனியார் நட்சத்திர ஓட்டலுக்குச் சென்று ஓய்வெடுத்தார்.

**ரோடு ஷோவில்....**

பிறகு நேற்று மாலை, அவ்விடமிருந்து கார் மூலம் அவனியாபுரம் வெள்ளக்கல் பகுதியில் உள்ள மருதுபாண்டியர் சிலைக்கு செல்லும் முதல்வர், அங்கிருந்து சுமார் 25 கி.மீ. தூரத்தில் நடைபெற்ற ரோடு ஷோவில் பங்கேற்றார். இந்த ரோடு ஷோ வில்லாபுரம், ஜெய்ஹிந்த்புரம், டி.வி.எஸ்.நகர், பழங்காநத்தம், வ.உ.சி. பாலம், காளவாசல், ஆரப்பாளையம் உள்ளிட்ட பகுதிகள் வழியாக நடைபெற்றது.

**மேற்கூரை திறப்பு...**

ரோடு ஷோவின் ஒரு பகுதியாக ஜெய்ஹிந்த்புரத்தில் நடைபயணம் மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் பொதுமக்களை சந்தித்தார். அப்போது, வீரகாளியம்மன் கோவிலில் ரூ.50 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்ட மேற்கூரையையும் அவர் திறந்து வைத்தார். தொடர்ந்து, மேயர் முத்து சிலை அருகே புதிதாக அமைக்கப்பட்ட வெண்கல சிலையை திறந்து வைத்தார்.

**முக்கிய அறிவிப்புகள்**

இன்றைய பொதுக்குழு கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பல முக்கிய அரசியல் அறிவிப்புகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 22 கி.மீ. தூர ரோடு ஷோவில் பங்கேற்றார்:

## மதுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் திரண்டு வந்து வரவேற்பு

மதுரை, ஜூன் 01-

**2 நாட்கள் பயணமாக மதுரை சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ரோடு ஷோவில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொதுமக்கள் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.**

தமிழகத்தில் சட்டசபை தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில், ஆளுங்கட்சியான தி.மு.க. மதுரையில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) கட்சியின் பொதுக்குழு கூட்டத்தை நடத்த இருக்கிறது. தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை 11.45 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை புறப்பட்டார். மதியம் 1.05 மணிக்கு மதுரை வந்தடைந்தார். அவருக்கு அமைச்சர்கள் பெரியசாமி, நேரு, தங்கம் தென்னரசு, மூர்த்தி, சாத்துார் ராமச்சந்திரன், தியாகராஜன், எம்.பி., டி.ஆர்., பாலு, மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கலெக்டர் சங்கீதா, மாநகராட்சி கமிஷனர் சித்ரா வரவேற்பு அளித்தனர். தொண்டர்கள் அளித்த வேஷ்டி, சால்வையை மு.க.ஸ்டாலின் பெற்றுக் கொண்டார். நேற்று மாலை முதல்வர் பங்கேற்ற ரோடு ஷோ நிகழ்ச்சி நடந்தது. அவனியாபுரத்தில் இருந்து ஆரப்பாளையம் திருமலை நாயக்கர் சிலை வரை 22 கி.மீ. தூரத்திற்கு ரோடு ஷோ நடைபெற்றது. இதில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழிநெடுகிலும் பொதுமக்கள் திரண்டு வந்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## தமிழ்நாட்டில் முகக்கவசம் அணிவது கட்டாயம் இல்லை

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்



சென்னை, ஜூன் 01-

**தமிழகத்தில் 38 பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனா வைரஸின் ஒமிக்ரான் திரிபு உருமாற்றம் பெற்று வருகிறது; ஆனால், இது குறித்து மக்கள் பதற்றம் அடையத் தேவையில்லை என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.**

சென்னையில் நேற்று (மே.31) செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர், "தமிழகத்தில் 38 பேருக்கு கொரோனா தொற்று உள்ளது. கொரோனா வைரஸின் ஒமிக்ரான் திரிபு உருமாற்றம் பெற்று வருகிறது. ஆனால், இது பெரிய பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. எனவே, மக்கள் இது குறித்து பதற்றம் அடையத் தேவையில்லை. புனே ஆய்வு மையத்துக்கு, தமிழகத்திலிருந்து 17 மாதிரிகள் சோதனைக்கு அனுப்பியுள்ளோம்.

மத்திய சுகாதார அமைச்சகம், முகக் கவசம் அணிவது நல்லது என்று தெரிவித்துள்ளது. அதையேத்தான் நாங்களும் வலியுறுத்துகிறோம். முகக்கவசம் அணிவது நல்லதே தவிர, எதுவுமே கட்டாயம் கிடையாது. அதுவும், எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளோர் பொது இடங்களில் முகக்கவசம் அணிவது நல்லது. தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பு, படுக்கை வசதிகள், ஆக்சிஜன் வசதி என எல்லாமே சிறப்பாக உள்ளது. மாவட்ட, தாலுகா தலைமை மருத்துவமனைகளிலும் எல்லா வசதிகளும் சரியாக உள்ளது. இந்தச் சூழலில் கொரோனா பரவல் பற்றிய வதந்திதகளை யாரும் பரப்பாதீர்கள். வதந்தி தான் பெரிய நோய். கொரோனா தொற்றைப் பொருத்தவரையில், மத்திய அரசு வழிகாட்டுதல்களை எப்போதும் நாம் பின்பற்றுகிறோம். அதேபோல், தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் கட்டுக்குள்ளேயே இருக்கிறது. பருவமழைக் காலம் என்பதால் காய்ச்சல் முகாம்களும் நடத்துகிறோம்." என்றார்.

## பொதுக்குழுவில் பங்கேற்பவர்களுக்கு தடபுடல் சைவ - அசைவ விருந்து

மதுரை, ஜூன் 01-

**மதுரையில் நடைபெற உள்ள தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்களுக்கான வழங்கப்படவுள்ள மதிய விருந்து பட்டியல் வெளியாகியுள்ளது.**

தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நேற்று விமானம் மூலம் மதுரை சென்றார். அவர் இன்று மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். பொதுக்குழுவிற்காக மதுரை உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்ட அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. முற்றிலும் குளிரூட்டப்பட்ட இந்த அரங்கின் முகப்பு தோற்றம் சென்னை அண்ணா அறிவாலயம் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் முதல்வர் மு.க. ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் பிரமாண்ட கட்-அவுட்டுகள் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மதுரையில் நடைபெற உள்ள தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர்களுக்கான வழங்கப்படவுள்ள மதிய விருந்து பட்டியல் வெளியாகியுள்ளது. அதன்படி, பொதுக்குழுவில் பங்கேற்கும் தி.மு.க. உறுப்பினர்களுக்கு சைவ, அசைவ உணவுகள் மதிய விருந்துக்கு வழங்கப்படுகிறது.

## தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கும் வாக்காளர் பதிவு அதிகாரிகள் நியமனம்

சென்னை, ஜூன் 01-

**தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கும் வாக்காளர் பதிவு அதிகாரிகளை நியமித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உத்தரவிட்டுள்ளார். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் மேற்கொள்ளுதல், இடமாற்றம் உள்ளிட்ட பணிகளை அவர்கள் மேற்கொள்வர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கும் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தல் நடக்கிறது. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், அனைத்து கட்சிகளும் தேர்தலை எதிர்கொள்ள தயாராகி வருகின்றன.

இந்தநிலையில், தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் தேர்தல் ஆணையம் களமிறங்கி உள்ளது. அதன் முக்கிய கட்டமாக தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கும் வாக்காளர் பதிவு அதிகாரிகளை நியமித்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உத்தரவிட்டுள்ளார்.

தற்போது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் அனைவரும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், திருத்தம் மேற்கொள்ளுதல், இடமாற்றம் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்வர்.

மாவட்ட வருவாய் அலுவலர், கூடுதல் கலெக்டர், துணை கலெக்டர், உதவி கலெக்டர் நிலையில் உள்ள அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்னர். 234 தொகுதிகளுக்குமான அதிகாரிகள் யார், அவர்களின் விவரங்கள் உள்ளிட்டவற்றை தமிழக தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக், அரசிதழில் வெளியிட்டுள்ளார்.

### தமிழ்நாட்டில் இயல்பை விட

## 97 சதவீதம் கூடுதல் கோடை மழை

சென்னை, ஜூன் 01-

**தமிழ்நாட்டில் 97 சதவீதம் கோடை மழை பெய்துள்ளது.**

சென்னையில் செய்தியாளர் சந்திப்பில் வானிலை மைய தென்மண்டல தலைவர் அமுதா கூறியதாவது:-

மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில், தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. தமிழ்நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக திருத்தணியில் 6 செ.மீ. மழை பதிவாகி உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் தமிழ்நாட்டில் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது. கனமழை எச்சரிக்கை எதுவும் இல்லை.

நீலகிரி, கோவை, தென்காசி, நீலகிரி, குமரி மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துள்ளது. கடந்த 3 மாதங்களில் தமிழ்நாட்டில் கோடை மழை 25 செ.மீ பெய்துள்ளது. இது இயல்பை விட 97 சதவீதம் அதிகம். சென்னையில் இயல்பை விட 12 சதவீதம் அதிகமாக கோடை மழை பெய்துள்ளது. சென்னையை பொறுத்தவரை கடந்த 3 மாதங்களில் ஒரு நாள் கூட 40 டிகிரி செல்சியஸ் வெப்பத்தை தொடவில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தமிழகத்தில் 6 நாட்கள் மழை பெய்ய வாய்ப்பு


சென்னை, ஜூன் 01-

**மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று (ஜூன் 1) முதல் ஜூன் 6-ம் தேதி வரை, அடுத்த 6 நாட்களுக்கு தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கடந்த 24 மணி நேரத்தில், தென்மேற்கு பருவமழை மேற்கு தொடர்ச்சி மாவட்டங்களில் தீவிரமாக உள்ளது. நீலகிரி, கோவை, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பெரும்பாலான இடங்களிலும், தேனி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அநேக இடங்களிலும் மழை பெய்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று (ஜூன் 1) முதல் ஜூன் 6ம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், நாளை ( ஜூன் 1) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37-38 டிகிரி செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| - 182.01 | - 82.90 |
| பாயிண்ட் 81,541.01 | பாயிண்ட் 24,750.70 |




**தங்கம்**
1 சவரன் ₹71,360
1 கிராம் ₹8,920



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00



**டாலர்** ₹85.56



**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

### அதிபர் ட்ரம்ப் அடுத்த அதிரடி:

# இறக்குமதி செய்யப்படும் இரும்புக்கு 50 சதவீதம் வரி

**நியூயார்க், ஜூன் 01-**

அமெரிக்காவில் இரும்பு இறக்குமதி வரியை 25 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக உயர்த்த போகிறோம் என்று அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்றது முதல் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன்படி, அமெரிக்க பொருட்கள் மீது பல்வேறு நாடுகள் அதிக வரி விதிப்பதாகவும், அதற்கு பதிலடியாக அந்தந்த நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதிக்கப்படும் என்றும் அறிவித்தார். இதற்கிடையே வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இரும்புக்கு 25



சதவீத வரி விதிக்கப்படுவதாக சில நாட்களுக்கு முன்பு டிரம்ப் அறிவித்தார்.

இந்த நிலையில் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் இரும்பு மீதான வரி 50 சதவீதமாக உயர்த்தப் படுவதாக டிரம்ப் அறிவித்துள்ளார். பென்சில்வேனியாவில் உள்ள இரும்பு ஆலையை ஆய்வு செய்த பின் இந்த அறிவிப்பை டிரம்ப் வெளியிட்டார். இது தொடர்பாக அவர் கூறும் போது, அமெரிக்காவில் இரும்பு இறக்குமதி வரியை 25 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக உயர்த்த போகிறோம். இது அமெரிக்காவில் இரும்பு தொழிலை மேலும் பாதுகாக்கும்.

இங்குள்ள ஆண்களும் பெண்களும் அமெரிக்காவை சக்திவாய்ந்ததாகவும் வலுவாகவும் வைத்திருக்க ஒவ்வொரு நாளும் உழைக்கிறார்கள். இப்போது, இறுதியாக உங்களுக்காக உழைத்து உங்களுக்காகப் போராடும் அதிபராக நான் செயல்படுகிறேன் என்றார்.

## மாவோயிஸ்டுகள் 8 பேர் சரண்

**ஐதராபாத், ஜூன். 01-**

தெலுங்கானா மாநிலம் முலுகு மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் 8 பேர் போலீசில் சரண் அடைந்துள்ளனர்.

அடுத்த ஆண்டுக்குள் நாட்டில் நக்சல் அமைப்பு முற்றிலும் ஒழிக்கப்படும் என்று மத்திய அரசு உறுதி அளித்துள்ளது. அதன்படி சத்தீஸ்கர் மாநிலத்தில் நக்சல்கள் ஆதிக்கத்தில் இருந்த பெரும்பகுதி விடுவிக்கப்பட்டு விட்டது.

போலீஸ் மற்றும் பாதுகாப்பு படையினர் தாக்குதலில் ஏராளமான நக்சல் அமைப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பலர் சரண் அடைந்து வருகின்றனர்.நீண்ட காலமாக நக்சல்கள் அமைப்பில் இருந்த பலர், தங்கள் சொந்த மாநிலங்களுக்கு தப்பி செல்லத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் தெலுங்கானா மாநிலம் முலுகு மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் 8 பேர் போலீசில் சரண் அடைந்தனர். மஹாராஷ்டிரா மற்றும் சத்தீஸ்கரைச் சேர்ந்த ஒரு பிரிவு குழு உறுப்பினர் , இரண்டு பகுதி குழு உறுப்பினர்கள் உட்பட 8 மாவோயிஸ்டுகள் ஆயுதங்களை கைவிட்டு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஷபரிஷ் முன் சரணடைந்தனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தற்போது வரை 355 மாவோயிஸ்டுகள் சரணடைந்துள்ளனர். நக்சலிச பாதையை விட்டு வெளியேறி தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் அமைதியான வாழ்க்கையை வாழ முடிவு செய்து சரண் அடைந்துள்ளனர். இவ்வாறு போலீசார் கூறினர்.

### சசி தரூர் குழுவின் விளக்கம் ஏற்பு:

# பாகிஸ்தான் ஆதரவு அறிக்கையை திரும்பப்பெற்றது கொலம்பியா

**புதுடெல்லி, ஜூன் 01-**

சசிதரூர் குழுவின் விளக்கம் ஏற்று பாக்கிஸ்தான் ஆதரவு அறிக்கையை திரும்பப் பெற்றது கொலம்பியா.

இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது பாகிஸ்தானில் ஏற்பட்ட இறப்புகளைக் கண்டித்து கொலம்பியா வெளியிட்ட தனது அறிக்கையை வாபஸ் பெற்றுள்ளது. தென் அமெரிக்க நாடான கொலம்பியாவுக்கு சென்றுள்ள காங்கிரஸ் எம்.பி சசி தரூர் தலைமையிலான அனைத்துக்கட்சி குழு அளித்த விளக்கத்தை ஏற்று அந்நாடு தனது முடிவை மாற்றியுள்ளது.

பஹல்காமில் ஏப்ரல் 22-ம் தேதி பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் மூலம் பாகிஸ்தானில் உள்ள 9 தீவிரவாத முகாம்களை தாக்கியது இந்திய ராணுவம்.



இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூரின் போது பாகிஸ்தானில் ஏற்பட்ட இறப்புகளுக்கு இரங்கல் தெரிவித்து கொலம்பியா வெளியிட்ட தனது அறிக்கையை வாபஸ் பெற்றுள்ளது. காங்கிரஸ் எம்.பி சசி தரூரின் கடுமையான மறுப்பைத் தொடர்ந்து இனி புதிய அறிக்கையை கொலம்பியா வெளியிடும் எனத் தெரிகிறது. கொலம்பியா சென்றுள்ள குழு இந்த விஷயத்தை சுட்டிக்காட்டி, ‘பயங்கரவாதிகளும் தங்கள் நாட்டைப் பாதுகாப்பவர்களுக்கும் ஒன்றானவர்கள் இல்லை’ என்று கூறினர்.

## ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

**டோக்கியோ, ஜூன் 01-**

ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவானது. இந்த நிலநடுக்கம் 20 கிமீ ஆழத்தில் ஏற்பட்டது. குஷிரோ, ஷிபெச்சா, ஹொன்ஷு ஆகிய நகரங்களில் நிலநடுக்கத்தின் தாக்கம் உணரப்பட்டது.

ஜப்பானின் வடக்கே அமைத்துள்ள ஹொக்கைடோவில் 6.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டு வானிலை ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் 20 கிமீ ஆழத்தில் ஏற்பட்டது. நிலநடுக்கத்தின் மையம் ஹொக்கைடோவின் கிழக்கு கடற்கரையில் இருந்ததாகவும், சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட நில அதிர்வு மக்களை அச்சத்தில் ஆழ்த்தியது. குஷிரோ, ஷிபெச்சா, ஹொன்ஷு ஆகிய நகரங்களில் நிலநடுக்கத்தின் தாக்கம் உணரப்பட்டது. நிலநடுக்கம் பல பகுதிகளில் வலுவான அதிர்வுகளை ஏற்படுத்தியதாகக் குறிப்பிடுகின்றன, ஆனால் இதுவரை யாருக்கும் காயமோ அல்லது பொருட்சேதமோ ஏற்பட்டதாக தகவல்கள் இல்லை.

### இந்தியா - பாக். போர் நிறுத்தம்:

# நோபல் பரிசை வாங்கவே டிரம்ப் தம்பட்டம் அடிப்பதாக விமர்சனம்

**வாஷிங்டன், ஜூன் 01-**

அமைதிக்கான நோபல் பரிசு வாங்கி விட வேண்டும் என்பதற்காக, இந்தியா -பாகிஸ்தான் போர் நிறுத்தம் குறித்து டிரம்ப் தனக்குத் தானே தம்பட்டம் அடித்துக் கொள்வதாக விமர்சனம் எழுந்துள்ளது.

பாகிஸ்தான் பயங்கரவாதிகளுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு பின், இந்தியா பாகிஸ்தான் இடையே சண்டை மூண்டது. இந்த சண்டையை நாங்கள் தான் நிறுத்தினோம் என்று அமெரிக்க அதிபர் கூறி வருகிறார். ஆனால், மோதலை நாங்கள் தான் நிறுத்தினோம் என்று திரும்பவும் அதிபர் டிரம்ப் கூறியிருக்கிறார்.

இந்தியா-பாகிஸ்தான் சண்டையிடுவதை நாங்கள் தடுத்துவிட்டோம். அது, அணு ஆயுத போராக மாறி பேரழிவு ஏற்பட்டு இருக்க கூடும். ஒருவருக்கொருவர் துப்பாக்கிசூடு நடத்துபவர்களுடனும், அணு ஆயுதங்களை பயன்படுத்த கூடியவர்களுடனும் நாங்கள் வர்த்தகம் செய்ய முடியாது என்று கூறினோம். இரு நாட்டு தலைவர்களும் அதை புரிந்து கொண்டதால் சண்டை நின்றுவிட்டது. குண்டுகள் மூலம் இல்லாமல் வர்த்தகத்தின் வாயிலாக போரை நிறுத்தியதை நினைத்து பெருமைப்படுகிறோம். ஆனால், இதைப்பற்றி யாரும் பேசுவதில்லை. இவ்வாறு அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் இடையே அமைதியை நிலை நாட்டியதற்காக பெருமைப்படுவதாக மீண்டும் டிரம்ப் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. எப்படியாவது இந்தாண்டு அமைதிக்கான நோபல் பரிசு வாங்கி விட வேண்டும் என்பதற்காக, இப்படி தனக்குத்தானே தம்பட்டம் அடித்துக் கொள்வதாக, டிரம்ப் மீது விமர்சனம் எழுந்துள்ளது. ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் டிரம்ப் தொடர்ந்து இப்படி பேசி வருகிறார்.

அமைதிக்கான நோபல் பரிசு ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் நார்வே தலைநகர் ஆஸ்லோவில் அறிவிக்கப்படுகிறது. டிரம்ப் கடந்த முறை அதிபராக இருந்தபோதே, எப்படியாவது நோபல் பரிசு வாங்கி விட வேண்டும் என்று முயற்சித்தார். ஆனால் அவருக்கு கிடைக்கவில்லை. அதனால் இந்த முறை உலகின் பல நாடுகளிலும் போர் நிறுத்த முயற்சிகளை மேற்கொண்டு இருப்பதாக கூறி, நோபல் பரிசு வாங்க தீவிர முயற்சி மேற்கொண்டிருக்கிறார். எனினும் அவரது செயல்பாடுகளை கண்டு, இதுவரை நார்வே நாட்டு நோபல் குழுவினர் பொருட்படுத்தவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

### அதிகரிக்கும் காலரா பரவல்:

# சூடானில் 10 லட்சம் பேர் பாதிப்பு

**கார்ட்டூன், ஜூன். 01-**

சூடானில் காலரா பரவல் காரணமாக 10 லட்சம் குழந்தைகள் பாதிக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல்

சூடானில் பரவிய புதிய காலரா தொற்று காரணமாக நூற்றுக்கணக்கானோர் பலியாகி உள்ளனர். கடந்த ஜனவரி 2025 முதல் 7,700 க்கும் மேற்பட்ட காலரா பாதிப்புகளில், 1,000 க்கும் மேற்பட்ட பாதிப்புகள் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளைப் பாதித்துள்ளதாக அந்நாட்டு சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தலைநகரான கார்ட்டூம் மற்றும் ஓம்டுர்மனில் பெரும்பாலான நோய்த் தொற்று பாதிப்புகள் பதிவாகி உள்ளன. ஆனால், வடக்கு கோர்டோபான், சென்னார், காசிரா, வெள்ளை நைல் மற்றும் நைல் நதி மாகாணங்களிலும் காலரா நோய்த் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் சூடானில் காலரா நோய் காரணமாக ஒரு வாரத்தில் மட்டும் 172-க்கும் மேற்பட்டோர் பலியானதாகவும், குறிப்பாக கடந்த 2 நாட்களில் தலைநகரான கார்ட்டூமில் 70 பேர் உயிரிழந்துள்ளதாகவும் என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலரா நோய் பரவல் கை மீறிச் சென்றுள்ள நிலையில், அங்கு சுமார் 10 லட்சம் குழந்தைகள் நோயால் பாதிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக யுனிசெப் எச்சரித்துள்ளது.

## தங்கம் விலையில் மாற்றமில்லை

**சென்னை, ஜூன் 01-**

சென்னையில் நேற்று ஆபரணத் தங்கம் விலையில் மாற்றமின்றி, ஒரு சவரன் தங்கம் ரூ.71,360க்கு விற்பனையானது.

மே 26-ம் தேதி இந்த வாரம் தொடங்கிய போது, ஒரு சவரன் ஆபரணத் தங்கம் விலை ரூ.71,600க்கு விற்பனையான நிலையில், சனிக்கிழமையான நேற்று, வார இறுதியில் கிட்டத்தட்ட ரூ.240 குறைந்து ரூ.71,360 என்ற அளவில் விற்பனையானது. தங்கம் விலை வியாழக்கிழமை மீண்டும் குறைந்தது. அதன்படி, கிராமுக்கு ரூ.40 குறைந்து ரூ.8,895-க்கும், சவரனுக்கு ரூ.320 குறைந்து ரூ.71,160-க்கும் விற்பனையானது. ஆனால், வெள்ளிக்கிழமை கிராமுக்கு ரூ.25 உயர்ந்து ரூ.8,920-க்கும், சவரனுக்கு ரூ.200 உயர்ந்து ரூ.71,360-க்கு விற்பனையானது. இந்த விலைதான் நேற்றும் நீடித்தது.


## திருச்செந்தூரில் உள்வாங்கிய கடல்..!

**திருச்செந்தூர், ஜூன். 01-**

திருச்செந்தூரில் கடல் திடீரென உள்வாங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதாரபதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்கள், முந்திய நாட்கள், பிந்திய நாட்களில் காலையில் கடல்நீர் உள்வாங்குவதும், பின்னர் மாலையில் இயல்புநிலைக்கு திரும்புவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், வழக்கத்துக்கு மாறாக திடீரென நேற்று காலை திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதாரபதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் சுமார் 70 அடி தூரம் கடல் உள்வாங்கியது. ஆனாலும் கோவிலுக்கு வந்த பக்தர்கள் எந்தவித அச்சமும் இன்றி பாறையில் நடந்து சென்று ஆச்சரியத்துடன் பார்த்து ரசித்தனர். மேலும் பக்தர்கள் வழக்கம்போல் கடலில் புனித நீராடி சாமி தரிசனம் செய்தனர்.

**01-06-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். சுகக் குறைவு ஏற்படலாம். தொழிலில் கொடுக்கல் வாங்கல் சிறப்பாக அமையும்.

**ரிஷபம்:-** தைரியம் கூடும். மனதில் தெம்பு, தெளிவும் நிலைத்திருக்கும். பொதுநல வாழ்க்கையில், சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்படலாம். பயணங்களில் ஆர்வம் ஏற்படும். புகழ் ஓங்கும்.

**மிதுனம்:-** இன்று தனலாபம், குடும்பத்தில் நிம்மதி ஆகியவை குறையும். மனைவி, மக்களின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் முதலீடுகளை குறைப்பது நல்லது.

**கடகம்:-** பெரியவர்கள் அன்பைப் பொழிவர். அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்பு ஏற்படலாம். இனிமை மிக்க பேச்சு சாதுர்யத்தால் எல்லோரையும் கவர்வீர்கள்.

**சிம்மம்:-** எதிர்பாராத இடங்களிலிருந்து பணவரவு இல்லாமல் பணமுடை ஏற்படும். வீட்டில் பெண்கள் அதிகம் செலவு செய்யாமல் அடக்கி வாசிப்பது நல்லது. குறிக்கோளற்ற பயணங்கள் ஏற்படலாம்.

**கன்னி:-** திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். மாணவர்கள் தங்கள் கல்வியில் சிறப்பு அடைவர். வீடு, நிலம் ஆகியவற்றில் ஆதாயம் கிடைக்கும். பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.

**துலாம்:-** தெய்வீக சிந்தனைகள் அதிகரிப்பதன் காரணமாக குடும்பத்துடன் வேண்டுதல்களை நிறைவேற்ற முயல்வீர்கள். வாழ்க்கையில் பல நல்ல திருப்பங்களை எதிர்பார்க்கலாம்.

**விருச்சிகம்:-** சிலருக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். பயணங்களில் ஆர்வம் ஏற்படும். புகழ் ஓங்கும். புண்ணிய காரியம் ஈடுபாடுகள் மூலம் புதுத்தெம்பு உருவாகும். எல்லா வகையிலும் நற்பலன்கள் ஏற்படும்.

**தனுசு:-** மனைவியின் கலகத்தால், வீட்டில் மனநிம்மதி குறையும். முறையான வழியில் சம்பாதிப்பது நல்லது. தீய வழியில் சென்றால் வழக்கு விவகாரங்கள் சந்திக்க நேரலாம்.

**மகரம்:-** எல்லா விதத்திலும் பூரண சுகம் ஏற்படும். வாகன, போஜன சுகங்கள் திருப்திகரமாக இருக்கும். புத்தாடை, புது அணிகலன்கள் சேரும். எதிர்பார்த்த வரவுகள் வந்து ஏற்றம் தரும்.

**கும்பம்:-** சூரியனைக் கண்ட பனிபோல பகைவர்கள் மறைவர். நண்பர்களின் உதவியால் தனவரவு கூடும். சிலருக்கு சொந்த வீடு அமையலாம். புதிய தோழிகள் நட்பு மகிழ்ச்சி தரும்.

**மீனம்:-** குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. வாகனங்களில் செல்லும் முன் முக்கிய பாகங்களை சோதித்து எடுத்துச் செல்லவும். தேவையற்ற பயணங்களால் அலைச்சல் ஏற்படும்.

# டெல்லியில் கொரோனாவுக்கு பெண் பலி

**டெல்லி, ஜூன். 01-**

புது டெல்லியில் கொரோனா பாதிப்புக்கு பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் கொரோனா பாதிப்புகள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில், புது டெல்லியில் கொரோனா பாதிப்புக்குள்ளான 60 வயது பெண் ஒருவர் பலியாகியுள்ளதாக, அம்மாநில அதிகாரிகள் நேற்று தெரிவித்துள்ளனர்.

இந்தப் புதிய பரவலில், டெல்லியில் முதல்முறையாக கொரோனா பாதிப்புக்குள்ளான ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மேலும், அம்மாநிலத்தில் தற்போது 294 பேர் கொரோனா பாதிப்புக்குச் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். ஆனால், அந்தப் பெண் குடல் சம்பந்தமான பிரச்னைகளுக்கு லபாரோடோமி சிகிச்சைப் பெற்று வந்ததாகவும், அவருக்கு தற்செயலாகவே கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டதாகவும், அதிகாரிகள் கூறியுள்ளனர்.

முன்னதாக, நாடு முழுவதும் ஒரே நாளில் 511 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், தற்போது சிகிச்சைப் பெறும் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை 2,710 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந்தோனேசியா: கல் குவாரியில் ஏற்பட்ட விபத்தில் 14 பேர் பலி

**ஜகார்த்தா, ஜூன் 01-**

இந்தோனேசியாவில் ஏற்பட்ட கல் குவாரி விபத்தில் இதுவரை 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தோனேசியாவின் ஜாவா மாகாணத்தின் சிரேபன் நகரத்தில் சுண்ணாம்புக் கல் குவாரி ஒன்று செயல்பட்டு வருகிறது. இங்கு தொழிலாளர்கள் பலர் பணியில் ஈடுபட்டிருந்தனர். நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் பாறைகள் சரிந்து விபத்து ஏற்பட்டது. அப்போது, அங்கு பணியாற்றிய தொழிலாளர்கள் மற்றும் ஏராளமான எந்திரங்கள் பாறைகளுக்குள் புதைந்தன.

இந்தச் சமபவத்தில் 13 தொழிலாளர்கள் பலியான நிலையில் ஏராளமானோர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. மேலும் 12 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தச் சுரங்கம் சட்டப்படி உரிய அனுமதிகள் பெற்று இயங்கி வந்தாலும், அங்குப் போதுமான பாதுகாப்பு வசதிகள் இல்லையென மேற்கு ஜாவா கவர்னர் டெடி முல்யாடி கூறியுள்ளார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் பலி எண்ணிக்கை மேலும் உயர்ந்துள்ளது. ஏற்கனவே 13 பேர் உயிரிழந்த நிலையில் தற்போது பலி எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது. இருப்பினும் ஆறு முதல் எட்டு பேர் இன்னும் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் மீட்புக்குழுவினரின் மீட்பு பணி தொர்ந்து தீவிரமாக நடைபெற்று வருகிறது.

# நைஜீரியாவில் வெள்ளம்: பலி 151 ஆனது

**மோக்வா, ஜூன் 01-**

மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவின் மோக்வா நகரத்தில் ஏற்பட்டுள்ள பெருவெள்ளத்தில் பலியாவர்களின் எண்ணிக்கை 151 ஆக உயர்ந்துள்ளது.

நைஜர் மாகாணத்திலுள்ள முக்கிய சந்தை நகரமான மோக்வாவில், பெய்த பருவமழையால் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதில், 88 பேரது உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் கூறப்பட்டது. இந்நிலையில், இந்த வெள்ளத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 151 ஆக உயர்ந்துள்ளதாக, உள்ளூர் அதிகாரிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

இத்துடன், அப்பகுதியில் வசித்த 3,000-க்கும் அதிகமான மக்கள் தங்களது வீடுகளிலிருந்து வெளியேற்றப் பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அப்பகுதிகளில், தற்போது மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. இதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் பெய்த கனமழையால் 3 குடியிருப்புப் பகுதிகளைச் சேர்ந்த 500-க்கும் அதிகமான வீடுகள் முழுவதுமாக வெள்ளத்தில் மூழ்கியதாகக் கூறப்படுகிறது.

# இஸ்ரேல் டிரோன் தாக்குதல்: ஹிஸ்புல்லா தளபதி பலி

**பெரூட், ஜூன். 01-**

இஸ்ரேல் டிரோன் தாக்குதலில் ஹிஸ்புல்லா தளபதி உயிரிழந்தார்.

இஸ்ரேல் , ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்குமேல் நீடித்து வருகிறது. இந்த போரில் 54 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் ஆயுதக்குழுவினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர், லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா பயங்கரவாத குழுவினர் ஆதரவு அளித்து வருகின்றனர்.

இந்த குழுக்கள் இஸ்ரேல் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது. இந்நிலையில், லெபனானின் நபதியா மாகாணம் டிர் இஸ் சஹ்ரானி பகுதியில் உள்ள சாலையில் நேற்று கார் சென்றுகொண்டிருந்தது. அந்த காரை குறிவைத்து இஸ்ரேல் டிரோன் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் காரில் பயணித்த ஹிஸ்புல்லா பயங்கரவாதி கொல்லப்பட்டார். கொல்லப்பட்ட பயங்கரவாதி ஹிஸ்புல்லா ஏவுகணை, ராக்கெட் பிரிவு தளபதியாக செயல்பட்டதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

**மரம் மனிதனின் உரம்**

# கேரளாவில் நீடிக்கும் கனமழை: விரைந்தது தேசிய பேரிடர் மீட்புக்குழு

**அரக்கோணம், ஜூன் 01-**

கேரளாவில் மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ள நிலையில், அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்புப் படையினர் 4 குழுக்களாக விரைந்தனர்.

கேரளாவில் வழக்கத்தை விட முன்கூட்டியே கடந்த மே 24-ஆம் தேதி தென் மேற்கு பருவ மழை தொடங்கியது. மாநிலம் முழுவதும் பரவலாக கனமழை நீடித்து வருகிறது. திருச்சூர், கண்ணூர், காசர்கோடில் ஏராளமான வீடுகளை வெள்ளம் சூழ்ந்துள்ளது. பத்தனம்திட்டா, கோட்டயம், இடுக்கியில் மரங்கள், மின்கம்பங்கள் விழுந்துள்ளன. மின்விநியோகம் துண்டிக்கப்பட்டதால், மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

தென்கிழக்கு பருவ மழை முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ள அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்புப் படையினர் 4 குழுக்களாக கேரளம் விரைந்தனர். கேரளம் பேரிடர் மேலாண்மை ஆணையம் கேட்டு கொண்டதின் பேரில் நவீன மீட்பு உபகரணங்களுடன் குழுவுக்கு 30 பேர் வீதம் 4 குழுக்களாக 120 பேர் சாலை மார்க்கமாக சனிக்கிழமை காலை கேரளம் விரைந்துள்ளனர். இவர்கள் அங்கிருந்து பத்தனம்திட்டா, ஆலப்புழா, எர்ணாகுளம், கோழிக்கோடு பகுதிகளுக்கு செல்கின்றனர். தற்போது 65 நிவாரண முகாம்களில் 1,800-க்கும் மேற்பட்டோர் தஞ்சமடைந்துள்ளனர்.

### அருணாச்சலில்

## நிலச்சரி-7 பேர் பலி

**காமெங், ஜூன். 01-**

வடகிழக்கு மாநிலமான அருணாசல பிரதேசத்தில் பெய்து வரும் கனமழையால், அங்குள்ள பல மாவட்டங்கள் வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளிக்கிழமை இரவு கிழக்கு காமெங் மாவட்டத்தில் உள்ள பனா–செப்பா சாலையில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

அப்போது வாகனம் ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்ததில் ஏழு பேர் பலியாகினர். பலியானவர்கள் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களில் நான்கு பேர் குழந்தைகள் என்றும் அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இரவு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்குப் பிறகு மீட்புக் குழுவினரால் அனைத்து உடல்களும் மீட்கப்பட்டன.

# எடப்பாடி பழனிசாமியுடன் தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே.சுதீஷ் சந்திப்பு

**சென்னை, ஜூன் 01-**
அ.தி.மு.க. பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமியை தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே.சுதீஷ் சந்தித்து பேசினார். 2024 மக்களவைத் தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில் தே.மு.தி.க. இடம் பெற்ற கூட்டணியும், பா.ஜ.க. தலைமையில் பா.ம.க. இடம்பெற்ற கூட்டணியும் தனித்தனியாகப் போட்டியிட்டன. இந்நிலையில், கூட்டணி பேச்சுவார்த்தையின் போது தே.மு.தி.க.வுக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்படுவதாக அ.தி.மு.க. பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்திருந்தார். மாநிலங்களவை உறுப்பினர் பதவி தொடர்பாக நேரடியாக அறிவிக்கப்படவில்லை. இருப்பினும், மாநிலங்களவை உறுப்பினர் பதவி தங்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்கும் என்று தே.மு.தி.க. பொதுச் செயலர் பிரேமலதா கருத்து தெரிவித்திருந்தார்.
தங்களுக்கு உறுதியளித்தபடி மாநிலங்களவை உறுப்பினர் பதவியை வழங்க வேண்டும் என்றும் அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார். ஆனால், கூட்டணிப் பேச்சுவார்த்தையின் போது, அப்படி ஏதும் ஒப்பந்தம் செய்யப்படவில்லை என்று எடப்பாடி பழனிசாமி மறுப்பு தெரிவித்தார்.
இந்நிலையில் அ.தி.மு.க. பொதுச்செயலர் எடப்பாடி பழனிசாமியை தே.மு.தி.க. பொருளாளர் எல்.கே.சுதீஷ் சந்தித்து பேசினார். சென்னையில் உள்ள எடப்பாடி பழனிசாமி இல்லத்தில் நடந்த சந்திப்பில், மாநிலங்களவை சீட் தொடர்பாக ஆலோசனை எனத் தகவல் தெரியவந்துள்ளது.

## ராமேஸ்வரம் கோவிலில்
# கவர்னர் ஆர்.என்.ரவி சாமி தரிசனம்



**ராமேஸ்வரம், ஜூன் 01-**
ராமேஸ்வரம் கோவிலில் கவர்னர் ஆர்.என். ரவி சாமி தரிசனம் செய்தார்.
தமிழ்நாடு கவர்னர் ஆர்.என்.ரவி நேற்று முன்தினம் மாலை ராமேஸ்வரம் வருகை தந்தார். அங்கு அவரை கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சந்தீஷ் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர். நேற்று அதிகாலை கவர்னர் ஆர்.என்.ரவி அக்னி தீர்த்த கடற்கரைக்கு சென்று புனித நீராடினார்.
பின்னர் ராமேஸ்வரம் கோவில் வளாகத்தில் உள்ள 22 புண்ணிய தீர்த்தங்களிலும் தனது மனைவியுடன் நீராடிய கவர்னர், கோவிலுக்குள் சென்று ராமநாதசுவாமி, பர்வதவர்த்தினி அம்பாளை வழிபட்டார். தொடர்ந்து அங்கு நடைபெற்ற ஸ்படிகலிங்க பூஜையில் மனைவியுடன் கலந்துகொண்டு பிரார்த்தனை செய்தார். முன்னதாக கவர்னர் ஆர்.என்.ரவிக்கு கோவில் நிர்வாகத்தின் சார்பில் மேளதாளங்கள் முழங்க உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

# பெண் சக்தியின் அடையாளமாக மாறிவிட்டது ஆபரேஷன் சிந்தூர்
## பிரதமர் நரேந்திரமோடி புகழாரம்



**போபால், ஜூன் 01-**
ஆபரேஷன் சிந்தூர் இந்தியாவின் 'பெண் சக்தி'யின் அடையாளமாகவும் மாறிவிட்டது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
போபாலில் நடந்த லோகமாதா தேவி அஹில்யாபாய் பெண் சக்தி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "சக்தி வழிபாட்டின் போது, நாம் குங்குமம் வழங்குகிறோம். இது இன்று இந்தியாவின் வீரத்தின் அடையாளமாக மாறியுள்ளது. பஹல்காமில், பயங்கரவாதிகள் இந்தியர்களின் உயிர்களை மட்டும் பறிக்கவில்லை, அவர்கள் நமது கலாச்சாரத்தையும் தாக்கினர். அவர்கள் நமது சமூகத்தை பிளவுபடுத்த முயன்றனர்.
ஆபரேஷன் சிந்தூர் இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் மிகவும் வெற்றிகரமான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையாகும். ஆபரேஷன் சிந்தூர் இந்தியாவின் 'பெண் சக்தி'யின் அடையாளமாகவும் மாறிவிட்டது. இந்த நடவடிக்கையில் எல்லைப் பாதுகாப்புப் படையின் (பி.எஸ்.எப்.) பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஜம்மு முதல் பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் குஜராத் எல்லை வரை பி.எஸ்.எப். மகளிர் முன்னணியில் இருந்தனர். எல்லை தாண்டிய துப்பாக்கிச் சூட்டுக்கு அவர்கள் வலுவான பதிலடி கொடுத்தனர். கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் முதல் எதிரி நிலைகளை அழிப்பது வரை, பி.எஸ்.எப்.பின் துணிச்சலான மகள்கள் தனித்துவமான வீரத்தை வெளிப்படுத்தினர்.
பெண்கள் அதிகாரமளிப்பதற்கான முன்முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. புதிய தொழில்நுட்பங்களிலிருந்து பெண்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு காலம் இருந்தது. ஆனால் இன்று, நமது பெண்கள் நவீன தொழில்நுட்பத்தில் முன்னணியில் இருக்க வேண்டும் என்பதற்காக அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது" என்று தெரிவித்தார்.

# வட கிழக்கு மாநிலங்களில் கனமழை: அசாமில் நிலச்சரிவுக்கு 5 பேர் பலி

**இட்டாநகர், ஜூன் 01-**
அசாமின் காம்ரூப் மெட்ரோ மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர்.
அசாம் மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக, தலைநகர் குவாஹாட்டி உட்பட பல பகுதிகளில் சாலைகளில் நீர் தேங்கி இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வெளியே வரமுடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர். காம்ரூப், காம்ரூப் மெட்ரோ, சச்சார் ஆகிய மூன்று மாவட்டங்களில் ஐந்து வருவாய் வட்டங்களை உள்ளடக்கிய பகுதிகளில் 10,000-க்கும் அதிகமானோர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில், காம்ரூப் மெட்ரோ மாவட்டத்தில் மட்டும் குழந்தைகள் உள்பட 5 பேர் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தனர்.
அருணாச்சலப் பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழை காரணமாக அங்கு பல்வேறு மாவட்டங்களிலும் திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மாவட்டத் தலைநகர் தபோர்ஜியோவில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.
சிக்கிம் மாநிலத்தில் தொடர்ந்து வரும் கனமழை மற்றும் தீஸ்தா நதியின் நீர் மட்டம் தொடந்து அதிகரித்து வருவதால் வானிலை ஆய்வுமையம் அங்கு ரெட் அலார்ட் விடுத்துள்ளது. மேலும், மங்கான், கியால்ஷிங் மற்றும் சோரெங் மாவட்டங்களில் திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் விரோதத்தை மட்டுமே கொடுக்கிறது: தலைமை தளபதி

**புதுடெல்லி, ஜூன் 01-**
"இந்தியா ராஜதந்திர தொடர்புகளை கொண்டிருந்தபோதிலும் பாகிஸ்தானிடமிருந்து விரோதத்தைத் தவிர வேறு எதையும் திரும்பப் பெறவில்லை." என முப்படை தலைமை தளபதி அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.



ஆசியாவின் முதன்மையான பாதுகாப்பு உச்சி மாநாடான ஷாங்க்ரி-லா உரையாடலில் பேசிய இந்திய முப்படை தலைமை தளபதி அனில் சவுகான், "இந்தியா - பாகிஸ்தான் உறவில், நாங்கள் மூலோபாயம் இல்லாமல் செயல்படவில்லை. நாம் சுதந்திரம் பெற்றபோது, சமூக, பொருளாதார, தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி என ஒவ்வொரு அளவீட்டிலும் பகிஸ்தான் நம்மை விட முன்னணியில் இருந்தது. இன்று, அதிக பன்முகத்தன்மை இருந்தபோதிலும் பொருளாதார செயல்திறன், மனிதவள மேம்பாடு மற்றும் சமூக நல்லிணக்கம் என அனைத்து முனைகளிலும் இந்தியா முன்னணியில் உள்ளது.
2014-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்ற பிறகு, பிரதமர் நரேந்திர மோடி அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை தனது பதவியேற்பு விழாவுக்கு அழைத்தது போல, இந்தியா பல முறை ராஜதந்திர ரீதியாக பாகிஸ்தானை அணுகியது. அதற்கு அடுத்த ஆண்டு, பிரதமர் மோடி லாகூருக்கு ஒரு திடீர் வருகை தந்து ஷெரீப்பைச் சந்தித்து அவரது பிறந்தநாளுக்கு வாழ்த்தும் தெரிவித்தார். ஆனால், கைதட்ட இரண்டு கைகள் தேவை. இருப்பினும் நமக்கு பதிலுக்கு கிடைப்பது விரோதம் மட்டுமே என்றால், இப்போதைக்கு உறவை முறித்துக் கொள்வது ஒரு நல்ல உத்தியாக இருக்கலாம்" என்று அவர் கூறினார்.

# நிறைய விஷயங்களை தேடி கற்றுக்கொண்டவர் ராஜேஷ்
## நடிகர் ரஜினிகாந்த் உருக்கம்

**சென்னை, ஜூன் 01-**
வாழ்நாள் முழுவதும் நிறைய விஷயங்களை தேடி தேடி கற்றுக் கொண்டவர் ராஜேஷ் என நடிகர் ரஜினி காந்த் தெரிவித்தார்.
தமிழ் சினிமாவில் மூத்த நடிகர்களில் ஒருவர் ராஜேஷ். சமீபகாலமாக உடல்நல பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்த அவர், சென்னை ராமாபுரத்தில் உள்ள தனது இல்லத்தில் ஓய்வு எடுத்து வந்தார். இந்தநிலையில் 3 நாட்களுக்கு முன் காலை அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இதையடுத்து உறவினர்கள் அவரை அருகேயுள்ள ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.
ஆனால் ஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியிலேயே அவரது உயிர் பிரிந்தது. அவருக்கு வயது 75.
மரணம் அடைந்த நடிகர் ராஜேசின் உடல், ராமாபுரம் கோத்தாரிநகரில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அன்றைய தினமே, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ராஜேஷ் உடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அவருடன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் கே.என். நேரு உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினார்கள்.



இந்த நிலையில், நடிகர் ரஜினிகாந்த் நேற்று ராஜேஷ் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். பின்னர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த ரஜினிகாந்த் கூறியதாவது:- நடிகர் ராஜேஷ் நல்ல மனிதர்; திடீர் மறைவு வருத்தமளிக்கிறது. ராஜேஷ் என்னுடைய நெருங்கிய நண்பர். சினிமா, அரசியல் ஆன்மிகம் என அனைத்தும் தெரிந்தவர். ராஜேஷ் தன் வாழ்நாள் முழுவதும் நிறைய விஷயங்களை தேடி தேடி கற்றுக்கொண்டார். என்னை அடிக்கடி சந்தித்து ஆரோக்கியமாக இருக்க யோசனைகளை கூறுவார். ராஜேஷ் மறைவு திரையுலகத்திற்கு பேரிழப்பு" என்று கூறியுள்ளார்.

# தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வியூகங்களை அமைத்து வருகிறோம்
## பா.ம.க. தலைவர் அன்புமணி பேச்சு

**சோழிங்கநல்லூர், ஜூன் 01-**
சட்டசபை தேர்தலில் வெற்றி பெறுவதற்கான அதற்கான வியூகங்களை அமைத்து வருகிறோம் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி கூறியுள்ளார்.
சென்னையை அடுத்த சோழிங்கநல்லூரில், இரண்டாவது நாளாக பா.ம.க. மாவட்ட நிர்வாகிகள் உடன், அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் நேற்றும் (மே 31) ஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், பா.ம.க. எம்.எல்.ஏ.க்கள் வெங்கடேஸ்வரன், சதாசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர். கட்சியின் கவுரவத் தலைவர் ஜி.கே.மணி பங்கேற்கவில்லை. அதேபோல், உடல்நிலை சரியில்லாத காரணத்தால், எம்.எல்.ஏ. அருள் பங்கேற்கவில்லை என்று கூறப்படுகிறது.
இந்த கூட்டத்தில் தொண்டர்கள் மத்தியில் அன்புமணி ராமதாஸ் பேசியதாவது: "பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் நம்முடைய குலசாமி, குலதெய்வம். அவர் ஒரு கொள்கை வழிகாட்டி. இந்த கட்சியை அவர் தான் தொடங்கியிருக்கிறார்.
அவருடைய 45 ஆண்டு கால உழைப்பு, தொலைநோக்கு சிந்தனை, சமூகநீதி உட்பட அனைத்தும் அவர் நமக்கு கற்றுக்கொடுத்தது. அவருடைய கொள்கைகள் அனைத்தையும் நாம் கடைபிடித்து, முன்னேறுவோம், வெற்றி பெறுவோம். அதில் மாற்றுக்கருத்து கிடையாது.
தமிழ்நாட்டை இத்தனை காலமாக யார் யாரோ ஆண்டார்கள். இனி அது நம்முடைய காலம். அது நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் இதுபோன்ற நடவடிக்கைகளின் மூலம், நமது கட்சியின் வளர்ச்சிக்கான செயலாக செய்து வருகிறோம். உலகளவில் பேசப்படும் வகையில் அண்மையில் மிகப்பெரிய மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோம். இளைஞர்கள் மனதில், அந்த மாநாட்டின் தாக்கம் இன்றுவரை இருக்கிறது. எனவே, அவர்களை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும்.
தமிழக மக்களின் உரிமை மீட்பு பயணம் என்ற பெயரில், நான் நடைபயணம் மேற்கொள்ள இருக்கிறேன். நீங்கள்தான் கட்சி. இந்த கட்சி என்னுடைய சொத்தோ, யார் சொத்தோ கிடையாது. கட்சியில் சின்ன சின்ன குழப்பங்கள் வருகிறது. அதையெல்லாம் சரிபடுத்தி விடுவேன்.
பொதுக்குழுவால் தேர்வு செய்யப்பட்டு, தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டு, உங்களால் தேர்வு செய்யப்பட்ட தலைவன் நான். இன்னும் 8-10 மாதத்தில் தேர்தல் வருகிறது. நிச்சயமாக மிகப்பெரிய வெற்றியை இந்த தேர்தலில் நாம் பெறுவோம். அதற்கான வியூகங்களை அமைத்து வருகிறோம்" என்று அவர் பேசினார்.

## கொரோனா அறிகுறிகள் இருந்தால்...
# மாணவர்களின் பெற்றோர்களுக்கு கர்நாடகா அரசு திடீர் அறிவுறுத்தல்

**பெங்களூரு, ஜூன் 01-**
கொரோனா அறிகுறிகள் இருந்தால் மாணவர்களை பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் என்று கர்நாடாக அரசு அறிவித்துள்ளது.
மாநிலத்தில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வரும் சூழலில், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு காய்ச்சல், இருமல், சளி மற்றும் பிற அறிகுறிகள் இருந்தால் அவர்களை பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் என்று கர்நாடக அரசு கேட்டுக் கொண்டுள்ளது.
கர்நாடக முதல்வர் சித்தராமையா தலைமையில் நடைபெற்ற கொரோனா பாதிப்பு குறித்த மறுஆய்வுக் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி, அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாநில சுகாதாரம் மற்றும் குடும்ப நல ஆணையர் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார்.
அந்த சுற்றறிக்கையில், 'பள்ளிக் குழந்தைகளிடம் காய்ச்சல், இருமல், சளி மற்றும் பிற அறிகுறிகள் காணப்பட்டால், குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டாம். மருத்துவரின் ஆலோசனையின்படி தேவையான சிகிச்சை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுங்கள். முழுமையாக குணமடைந்த பின்னரே குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.
குழந்தைகள் காய்ச்சல், இருமல், சளி மற்றும் பிற அறிகுறிகளுடன் பள்ளிக்கு வந்தால், ஆசிரியர்கள் அவர்களின் பெற்றோருக்குத் தெரிவித்து வீட்டிற்கு அனுப்ப வேண்டும். பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களிடையே இந்த அறிகுறிகள் காணப்பட்டால், அவர்கள் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்ற அறிவுறுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வந்தே பாரத் ரயிலின் காலை உணவில் அசைவம் நீக்கம்? பயணிகள் புகார்



**சென்னை, ஜூன் 01-**
வந்தே பாரத் ரயிலில் காலை உணவிற்கான பட்டியலில் அசைவ உணவிற்கான ஆப்சனை முன் அறிவிப்பின்றி ரயில்வே நீக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
சென்னையில் இருந்து நாகர்கோவில், திருநெல்வேலி, மைசூரு, பெங்களூரு போன்ற நகரங்களுக்கு வந்தே பாரத் ரயில் சேவை இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில்,சென்னையில் இருந்து புறப்படும் வந்தே பாரத் ரயிலில் விருப்பமான உணவை தேர்ந்தெடுக்கும் பகுதியில் காலை உணவிற்கான பட்டியலில் இருந்து அசைவ உணவை முன் அறிவிப்பின்றி ரயில்வே நீக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
இது தொடர்பாக தெற்கு ரயில்வே மற்றும் ஐ.ஆர்.சி.டி.சி. தரப்பில் இருந்து முன்கூட்டியே எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. ஐ.ஆர்.சி.டி.சி. செயலியில் வந்தே பாரத் ரயிலுக்கான டிக்கெட் முன்பதிவு செய்யும் பகுதியில் மதிய உணவு மற்றும் இரவு உணவிற்கு மட்டுமே அசைவ உணவு தேர்வு செய்யும் பகுதியில் காட்டப்படுவதாக பயணிகள் புகார் தெரிவித்துள்ளனர்.
இது குறித்து தெற்கு ரயில்வே தரப்பில் இதுவரை எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. தொழில்நுட்பக் கோளாறு ஏதேனும் ஏற்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் கூறியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# 8 ஆண்டுகளாக டாஸ்மாக்கின் ஆண்டு அறிக்கை வெளியிடப்படாதது ஏன்..?
## அமைச்சர் முத்துசாமி விளக்கம்

**சென்னை, ஜூன் 01-**
டாஸ்மாக்கின் ஆண்டு அறிக்கை தொடர்ந்து 8 ஆண்டுகளாக வெளியிடப்படாதது குறித்து அமைச்சர் முத்துசாமி விளக்கமளித்துள்ளார்.
தமிழ்நாடு அரசின் டாஸ்மாக் நிறுவனத்தின் நிதி நிலை அறிக்கை தொடர்ந்து 8-வது ஆண்டாக வெளியிடப்படாதது பேசுபொருளாகி உள்ளது. கடைசியாக 2016-17-ம் நிதியாண்டிற்கான 34-வது ஆண்டு அறிக்கையை டாஸ்மாக் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தில் வெளியிடப்பட்டது.
நிறுவனங்கள் சட்டத்தின் கீழ், ஒவ்வொரு நிறுவனமும் ஒரு வருடாந்திர அறிக்கையை தயாரிக்க வேண்டும். இது அதன் செயல்பாடுகள் மற்றும் நிதி செயல்திறன் பற்றிய விரிவான கண்ணோட்டத்தை அதன் பங்குதாரர்களுக்கு வழங்கும் ஒரு விரிவான ஆவணமாகும். உதாரணமாக, அரசுக்கு சொந்தமான மற்றொரு நிறுவனமான தமிழ்நாடு மின் விநியோகக் கழகம் 2023-24ம் ஆண்டிற்கான அதன் வருடாந்திர நிதிநிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது.
இதுகுறித்து மதுவிலக்கு மற்றும் கலால்துறை அமைச்சர் முத்துசாமி கூறுகையில், டாஸ்மாக்கின் ஆண்டு அறிக்கைகளை 2023-24ம் நிதியாண்டு வரை முறையாக சட்டமன்றத்தில் சமர்பிக்கப்பட்டதாகவும், 2024-25-ம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் கூறிய அவர், ஏன் அவை வெளியிடப்படவில்லை என்பதை சரிபார்க்கிறேன் என்று தெரிவித்தார். மேலும், இதுதொடர்பாக டாஸ்மாக் அதிகாரிகள் இது வரை எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.
முன்னதாக, டாஸ்மாக்கில் ரூ.1000 கோடி ஊழல் நடந்திருப்பதாக அமலாக்கத்துறை குற்றம்சாட்டி இருந்தது. மேலும் இதுதொடர்பாக நடைபெற்ற சோதனை தொடர்பான வழக்கும் தற்போது நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# ராமதாஸ்-அன்புமணி சந்தித்து கொள்ள முயற்சி எடுக்கிறேன்
## பா.ம.க. கவுரவத் தலைவர் ஜி.கே.மணி பேட்டி

**தைலாபுரம், ஜூன் 01-**
ராமதாஸ்- அன்புமணி இருவரும் சந்தித்துக் கொள்ள வேண்டும், என்று முயற்சி எடுக்கிறேன் என்று பா.ம.க. கவுரவத் தலைவர் ஜி.கே.மணி கூறியுள்ளார்.
பா.ம.க. கவுரவத் தலைவர் ஜி.கே.மணி நேற்று (மே 31) தைலாபுரத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் செய்தியாளர்களை சந்தித்தார். அது பெரிய செய்தி ஆகிவிட்டது. அதன் தொடர் நிகழ்வுகள் மனதை மிகவும் வேதனை அடையச் செய்துள்ளது. என்னைப் பொறுத்தவரை உண்மையாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். பா.ம.க. கட்சியினரும் அதைத்தான் விரும்புகின்றனர். ராமதாஸ்- அன்புமணி இருவரும் சந்தித்துக் கொள்ள வேண்டும், என்று முயற்சி எடுக்கிறேன். எங்களது கட்சியைச் சேர்ந்தவர்களே கூட ராமதாஸ் - அன்புமணி இடையிலான விரிசலுக்கு நான் தான் காரணம் என்ற செய்தியை பதிவிடுகிறார்கள். இதை எப்படி என்னால் தாங்கிக்கொள்ள முடியும். நான் இரண்டு முடிவு எடுத்துள்ளேன். உங்களுக்கும், என்னுடைய குடும்பத்துக்கும், இந்த நாட்டுக்கும் தெரியாமல், எங்காவது போய்விட வேண்டும். யார் கண்ணிலும் படாமல் ஓடிப்போய்விட வேண்டும். அப்படி இல்லை என்றால் நான் உயிரோடு இருக்கக்கூடாது. இந்த இரண்டுதான் என்னுடைய முடிவு என்ற நிலையில் நான் பேசிக்கொண்டிருக்கிறேன் என்று அவர் கூறினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



பாகிஸ்தானுடனான போர் நிறுத்தம் எவ்வாறு நடந்தது என்பது குறித்து பிரதமர் மோடியின் நெருங்கிய நண்பரும் அமெரிக்க அதிபருமான ட்ரம்ப் 21 நாட்களில் 11வது முறையாகக் கூறியுள்ளார். ஆனால் ட்ரம்ப்பின் நண்பர் மோடியோ, இதனை மவுனத்துடன் தொடர்ந்து புறக்கணிக்கிறார். பிரதமர் எப்போது இதுகுறித்து பேசுவார்?
**- ஜெய்ராம் ரமேஷ்**



பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்கள் நியமனத்தில் தற்காலிக அடிப்படையில் நியமிக்கும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும். மாறாக, பல்கலைக் கழகங்களில் காலியாக இருக்கும் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியிடங்களையும் இட ஒதுக்கீட்டைக் கடைபிடித்து நிரந்தரமாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.
**- அன்புமணி**



கன்னடர்களுக்கு தமிழர்கள் என்றாலே எப்போதும் வெறுப்புதான். கீழடி ஆய்வறிக்கையை மத்திய அரசு ஏற்காது. கீழடியில் வெறும் 2 ஏக்கரில் மட்டும்தான் ஆய்வு நடந்துள்ளது. நூறு ஏக்கரிலும் ஆய்வு நடத்தியிருந்தால் இன்னும் அரிய தகவல்கள் கிடைத்திருக்கும். அந்தப் பெருமையை தமிழர்களுக்கும், தமிழ் இனத்துக்கும் கொடுக்கத் தயங்குவார்கள்.
**- சீமான்**



மத்திய அரசின் கீழ் உள்ள நிறுவனங்களில் வேண்டுமென்றே இந்தியை திணிப்பது கடும் கண்டனத்துக்குரியது. ஆகாஷவாணியில் மாநிலங்களின் மொழி, கலாச்சார பன்முகத்தன்மையை பாதுகாக்க வேண்டும். ஆனால், பா.ஜ.க.விற்கு தமிழ்நாட்டு மக்களின் மொழி, கலாச்சார உணர்வுகள் என்றுமே முக்கியமானதாக இருந்ததில்லை என்பதற்கு இது ஒரு சான்று.
**- செல்வப்பெருந்தகை**

# தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் 25 மகளிர் சுயஉதவி குழுக்களில் உள்ள 325 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவிகள்

## அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்



**தஞ்சாவூர்,ஜூன்.01-**
தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டத்திற்குட்பட்ட 5 இடங்களில் மக்களுடன் முதல்வர் முகாம் நிகழ்ச்சிகள் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் (31.05.2025) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமை வகித்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் மு.சண்முகம் , மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி. ஆர்.சுதா . பாபநாசம் சட்டமன்ற உறுப்பினர் முனைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா , மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் , கும்பகோணம் சார் கலெக்டர் ஹிருத்யா எஸ்.விஜயன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் உமையாள்புரம் ஊராட்சிக்குட்பட்ட அரசு உதவி பெறும் உயர்நிலைப்பள்ளி, சத்தியமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட நக்கம்பாடி சமுதாயக்கூடம், பண்டாரவடை ஊராட் சிக் குட் பட்ட ஜைனுால் உலூாம் கல்யாண மண்டபம், வழுத்துார் ஊராட்சிக்குட்பட்ட சௌகத்துல் இஸ்லாம் அரசு உதவி பெறும் ஆரம்ப பள்ளி, பசுபதி கோவில் ஊராட்சிக்குட்பட்ட மகளிர் சுய உதவிக் குழு பயிற்சி கட்டிடம் ஆகிய 5 இடங்களில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 25 மகளிர் சுயஉதவி குழுக்களில் உள்ள 325 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 63 இலட்சம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்கி உயர் கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மூன்றாம் கட்டமாக பாபநாசம் வட்டத்தில் 5 இடங்களில் நடைபெறுகிறது. முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஏழை எளியோர் நலன் காக்க ஏராளமான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமை பெண் திட்டம். இன்னுயிர் காப்போம், தமிழ்ப் புதல்வன் திட்டம், விடியல் பயணம், காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற திட்டங்கள் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், கல்வி வளர்ச்சியில் தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தாழ்த்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர். பிற்படுத்தப்பட்டோர் கல்வி உரிமை பெறுவதற்கு சட்டப் பாதுகாப்பையும் சமூக நீதியினையும் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் பேறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் பெற்றுத் தந்தார்கள். சமூக நீதியினையும் கல்வி உரிமையினையும் தொடர்ந்து அக்கறையுடன் முதலமைச்சர் காப்பாற்றி வருகிறார்.

பல்வேறு திட்டங்களின் மூலம் அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் மக்களை தேடி மக்களது குறைகளை களைய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். பொதுமக்கள் இத்திட்டங்களை பயன்படுத்தி பயன் பெற வேண்டும் என உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்தார்.

மேலும், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மக்களுடன் முதல்வர் முகாமில் பதிவு செய்து உடனடி தீர்வாக தொழிலாளர் நலத்துறை சார்பில் தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் அட்டைகள், முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு அட்டைகள், புதிய குடும்ப அட்டைகள் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில் சமூக பாதுகாப்புத் திட்டம் தனித் துணை கலெக்டர் பெ.மணிமாறன், பாபநாசம் வட்டாட்சியர் தா.பழனிவேலு, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் க.விஜயலட்சுமி, ந.சிவகுமார் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது




**புதுக்கோட்டை,ஜூன்.01-**
புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், கலெக்டர் மு.அருணா, தலைமையில் (30.05.2025) நடைபெற்றது. பின்னர், கலெக்டர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழகத்தில் உள்ள விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் இன்றையதினம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விவசாயிகள் தெரிவித்த விவசாயம் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மழையளவு, புதுக்கோட்டை மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 858.45 மி.மீ. ஆகும். 2025 ஆம் ஆண்டு மே 29 ஆம் தேதி வரையில் 157.67 மி.மீ மழையளவு பெறப்பட்டுள்ளது. மே 29 ஆம் தேதி வரை கிடைக்கப்பெற்ற மழையளவு இம்மாத வரையிலான இயல்பான மழையளவு 141.51-ஐ விட 16.16மி.மீ. அதிகமாகும்.

பயிர்ச் சாகுபடி விவரம், 2025-2026 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் நெல் 2838 எக்டர், சிறுதானியங்கள் 89 எக்டர், பயறுவகைப் பயிர்கள் 88 எக்டர், எண்ணெய்வித்துக்கள் 668 எக்டர், கரும்பு 16 எக்டர், பருத்தி 1 எக்டர் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

இடுபொருட்கள் இருப்பு, மாவட்டத்திலுள்ள 33 வேளாண்மை விரிவாக்க மையங்களில் 128.310 மெ.டன் சான்று பெற்ற நெல் விதைகளும், 26.468 மெ.டன் பயறு விதைகளும், 26.254 மெ.டன் நிலக்கடலை விதைகளும், 0.507 மெ.டன் சிறுதானிய விதைகளும் 0.259 மெ.டன் எள் விதைகளும் இருப்பில் உள்ளன. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண்மை விரிவாக்க மையங்களிலிருந்து பெற்றுச் சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விதை விற்பனை உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் விநியோகம் செய்திடத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடப்பு பருவத்திற்கு தேவையான ADT-45, CO-55, TPS-5 நெல் விதைகள் அனைத்தும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உர இருப்பு விவரம், விவசாயிகளுக்குத் தேவையான தரமான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு. புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது யூரியா 3760 மெட்ரிக் டன்னும், டிஏபி 788 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 1427 மெட்ரிக் டன்னும், காம்ப்ளக்ஸ் 4009 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் உர உரிமம் பெற்ற தனியார் நிறுவனங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கத்தில் மட்டும் 374 மெட்ரிக் டன் யூரியா, 212 மெட்ரிக் டன் டிஏபி, 349 மெட்ரிக் டன் பொட்டாஷ், 367 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. பிரதம மந்திரி விவசாயிகள் கௌரவ நிதியுதவித் திட்டம், புதுக்கோட்டை மாவட்டத்தில் பிரதம மந்திரி விவசாயிகளின் கௌரவ நிதித் திட்டத்தின்கீழ் 88732 விவசாயிகள் பதிவு செய்து பயன் பெற்றுவருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் 01.02.2019 க்கு முன்பு நேரடி பட்டா உள்ள விவசாயிகளுக்கு நான்கு மாதங்களுக்கு ஒரு முறை ரூ.2000/- வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.6000/- மூன்று தவணைகளாக ஏப்ரல் முதல் ஜூலை வரை, ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை, டிசம்பர் முதல் மார்ச் மாதம் வரையிலான காலங்களில் விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் தொடர்ந்து தவணை தொகை பெறுவதற்கு தங்களது ஆதார் எண்ணை வங்கி கணக்கு எண்ணுடன் இணைத்து DBT Mode-ற்கு மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது. புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் இதற்கென சிறப்பு உதவி மையம் பிரதி வெள்ளி தோறும் செயல்பட்டு வருகிறது. இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உழவர் செயலி, வேளாண்மைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் மானியத்திட்டங்கள் அனைத்தும் ஆன்லைன் மூலம் முன் பதிவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. எனவே, விவசாயிகள் உழவர் செயலியினை பயன்படுத்தி மானியத் திட்டங்களில் வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றை பெறுவதற்கு முன் பதிவு செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. உழவர் செயலியை Google Play store- இல் UZHAVAR என உள்ளீடு செய்து பதிவிறக்கம் செய்து பயன்படுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது எனவும் கலெக்டர் மு.அருணா, தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ. ராஜராஜன் , இணை இயக்குநர் (வேளாண்மை) மு.சங்கரலட்சுமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ம.தீபாசங்கரி, வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வி.பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), ச.சிவக்குமார் (அறந்தாங்கி), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) உமா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் த.நந்தக்குமார், துணை இயக்குநர் (வேளாண்மை) (மத்திய அரசு திட்டம்) செல்வி, வேளாண்மை அலுவலர் முகமது ரபி, விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கறம்பக்குடி ஒன்றியத்தில் பள்ளிகள் திறப்பதை ஒட்டி பள்ளி வளாகங்களில் தூய்மை பணிகள்



**கந்தர்வகோட்டை,ஜூன்.01-**
புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியத்தில் உள்ள பள்ளிகளில் கோடை விடுமுறை முடிந்து தற்போது ஜூன் இரண்டாம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால்

கலெக்டர் மற்றும் கூடுதல் கலெக்டர் அவர்களின் அறிவுரையின்படி பள்ளி வளாகங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெங்கடேஷ் பிரபு நலதேவன் ஆகியோர் தலைமையில் தூய்மை செய்யும் பணி தூய்மை காவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களால் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றது

இதன் ஒரு பகுதியாக மைலன்கோண்பட்டி ஊராட்சியில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி வளாகம் மற்றும் சாலைகளில் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டது. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பூபதி ஊராட்சி செயலாளர் எம். பூபதி வட்டார ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி பணித்தள பொறுப்பாளர் இளையராஜா மற்றும் ஊக்குனர்கள் தூய்மை காவலர்கள் துப்புரவு பணியாளர்கள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

# கும்பகோணம் பட்டீஸ்வரம் ஞானாம்பிகை சமேத தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலில் வைகாசி விசாகப்பெருவிழா

## கொடியேற்றத்துடன் தொடங்கியது



**கும்பகோணம்,ஜூன்.01-**
கும்பகோணம் அருகேயுள்ள பட்டீஸ்வரம் ஞானாம்பிகை சமேத தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் பிரசித்தி பெற்ற துர்க்கையம்மன் ஸ்தலமாக விளங்குகிறது.

தேவலோக பசுவான காமதேனுவின் மகள் பட்டி என்பவள், இத்திருக்கோயில் ஈசனை நாள்தோறும் பூஜித்து முக்தி பெற்றதால் இத்தலம் பட்டீஸ்வரம் என போற்றப்படுகிறது. பெருமைக்குரிய சிவ தலத்தில் வைகாசி விசாக பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. கொடியேற்றத்தை முன்னிட்டு கொடிமரம் அருகே சிறப்பு மலர் அலங்காரத்தில் விநாயகர், வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமான், சுவாமி அம்மாள், சண்டிகேஸ்வரர் மற்றும் அஸ்திர தேவருடன் எழுந்தருள, கொடி மரத்திற்கு மாப்பொடி, திரவியப் பொடி, மஞ்சள்பொடி, தேன், பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட பலவிதமான நறும ணப் பொ ருட் களை கொண்டு அபிஷேகம் செய்யப்பட்டது.

சிவாச்சாரியார் வேதமந்திரங்கள் ஓத, நாதஸ்வர மேள தாள மங்கல வாத்தியங்கள் முழங்க, நந்தியம்பெருமான் உருவம் பொறிக்கப்பட்ட திருக்கொடி கொடிமரத்தில் ஏற்றி வைக்கப்பட்டு, சுவாமிகளுக்கும், கொடிமரத்திற்கும் சிறப்பு பூஜைகள் செய்து கோபுர மகாதீபாரணை செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் ஏராளமானோர் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். தினமும் பல்வேறு வாகனங்களில் சுவாமி திருவீதி உலாவும், ஜூன் 4 ஓலைச்சப்பரம், 6ம் தேதி திருக்கல்யாண வைபவம், 8ம் தேதி தேரோட்டம், 9ம் தேதி தீர்த்தவாரி உற்சவம், 11ஆம் தேதி விடையாற்றியுடன் வைகாசி பெருவிழா நிறைவடையும். விழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழு தலைவர் ஐயப்பன், செயல் அலுவலர் நிர்மலா தேவி, அறங்காவலர் குழு உறுப்பினர்கள் டாக்டர் பழனிவேல், ஆசைத்தம்பி, மின்னல் கொடி, பாலகுரு, சத்திவனேஸ்வரர் கோவில் தக்கார் ஆய்வர் சுதாராமமூர்த்தி மற்றும் கிராமவாசிகள் ஆகியோர் செய்திருந்தனர்.

# பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற்றது



**பெரம்பலூர்,ஜூன்.01-**
பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு தலைமையில் (30.05.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை எடுத்துரைத்தார்கள். ராமராஜன் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் அடிகிணறு வெட்ட வழிவகை செய்ய வேண்டுமென்றும், கொட்டரை நீர்தேக்கத்தில் மாற்றுப்பாதை அமைத்திட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். ராஜீ மானாவாரி பயிர்களுக்கு கோடை உழவு மானியம் கூடுதலாக வழங்க வேண்டுமெனவும், அனைத்து நீர் நிலைகளிலும் நில அளவை செய்து தூர்வார வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். கருணாநிதி லாடபுரம் பகுதியில் அரசு மருத்துவமனையை சுற்றி சீரமைத்து தர வேண்டுமென கேட்டுக் கொண்டார். ராஜா மக்காச்சோளத்திற்கு பயிர் காப்பீட்டுத் தொகையை அதிகப்படுத்தி விரைவில் வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

செந்தில்குமார் அரும்பாவூர் பகுதியில் குடிதண்ணீர் கிணறு உள்ள பகுதியில் சீரமைத்து தர வேண்டுமென கேட்டுக்கொண்டார். வரதராஜன் அனைத்து கிராம விவசாயிகளுக்கும் விடுபாடின்றி பயிர் காப்பீட்டுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். ரமேஷ் நெல் மற்றும் மக்காச்சோளத்திற்கு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஆதார விலையை கூடுதலாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார். ரகு பாடாலூர் மேம்பால பணிகளை துரிதப்படுத்தி போக்குவரத்து இடர்பாடுகளை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார். ஏகே.ராஜேந்திரன் கரும்பிற்கான வெட்டுக் கூலி அதிகமாக உள்ளதால் ஊக்கத் தொகையினை அதிகப்படுத்த வேண்டுமெனவும், வீடு கட்டி குடியிருப்போருக்கு பட்டா வழங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார். செல்லதுரை கூட்டுறவு வங்கிகளில் பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், பெரம்பலூரில் புதிய கூட்டு குடிநீர் திட்டத்தினை துரிதப்படுத்தி குடிதண்ணீர் முறையாக வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். விவேகானந்தன் அரும்பாவூர் பேரூராட்சியில் கழிவு நீர் தேங்கி உள்ளதால் பாலம் சீரமைக்க வேண்டுமெனவும், சதாசிவ அணைக்கட்டு சீரமைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். மணி மங்கூன் பகுதியில் சாலை சீரமைத்து தர வேண்டுமெனவும், பொம்மனப்பாடி ஏரி வாய்க்கால் தூர்வாரி சீரமைக்கவும், வேலூர் அரசு மருத்துவமனை அருகில் நிழற்குடை அமைத்து தர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

ஜெயராமன் பெரம்பலூர் மாவட்டத்தில் ஜமாபந்தி சிறப்பாக நடைபெற்றதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். அனைத்து அரசு பள்ளிகளிலும் அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டுமென கேட்டுக்கொண்டார். நீலகண்டன் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு வரப்படும் நெல் மூட்டைகளை மழையில் நனையாமல் பாதுகாத்து விவசாயிகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அரும்பாவூர் பெரிய ஏரியில் ஏற்பட்ட உடைப்பினை சீர் செய்யும் பணிகளை துரிதப்படுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

அனைத்து விவசாய சங்கத் தலைவர்களும், நகைக்கடன் பெறுவதற்கு ஒன்றிய அரசு அறிவித்த புதிய விதிகள் விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் எதிரானதாக உள்ளதால் உடனடியாக அதை திரும்ப பெற்று பழைய விதிமுறைகளையே நடைமுறை படுத்த வேண்டும் எனவும் பெரம்பலூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விவசாய இலவச மின் இணைப்பினை வழங்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்கள்.

அனைவரின் கோரிக்கைகளையும் கேட்டறிந்த மாவட்ட வருவாய் அலுவலர் , சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களை உடனுக்குடன் பதில் அளிக்க உத்தரவிட்டதன் அடிப்படையில், அலுவலர்கள் விவசாயிகளுக்கு பதிலுரைகளை வழங்கினர். இக்கூட்டத்தில் சார் கலெக்டர் சு.கோகுல் வேளாண்மை இணை இயக்குநர் செ.பாபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வே.) பொ.ராணி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் க.பாண்டியன், மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மாவட்ட வளர்ச்சி அலுவலகம் திறப்பு விழா



**திருவாரூர்,ஜூன்.01-**
திருவாரூர் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் மாவட்ட வளர்ச்சி அலுவலகம் அரசு மருத்துவக் கல்லூரி அருகில் நேற்று முன்தினம் துணை மேலாண் இயக்குனர்கள் அஜய்கேசூத் மற்றும் ஜிஎஸ்ராவத் காணொளி மூலமாக திறந்து வைத் த னர்.வி ழா வில் நபார்டு வங்கியின் திருவாரூர் மாவட்ட வளர்ச்சி மேலாளர் மெசியா வரவேற்புரையாற்றி வங்கியின் பணிகள் பற்றி விவரித்தார்.மேலும் முன்னோடி வங்கிமேலாளர் ரங்க நாத பிர பு, இந் தி யன் ஓவர்சீஸ் வங்கியின் கிராமிய சுயவேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் இயக்குநர் கணேஷ், நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியார் இராமசாமி, டாஃப்தொண்டு நிறுவனர் ஜெயகணபதி,ஆர்.டி.ஃ பௌன்டேஷன் தொண்டு நிறுவனர் விஜயகுமார்,வானவில்தொண்டு நிறுவன செயல் இயக்குனர் எம். எம்.வசிர் மற்றும் பல தொண்டு நிறுவனத்தினர் கலந்து கொண்டனர்.மேலும் வங்கி அலுவலர்கள், தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# திருவாரூரில் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் புற்றுநோய் விழிப்புணர்வு பேரணி



**திருவாரூர்,ஜூன்.01-**
திருவாரூர் ஒளிவரன் ஃபவுண்டேஷன் சார்பில் போதைப் பொருட்கள் (புகையிலை) பயன்படுத்துவதால் ஏற்படும் புற்றுநோய் விழிப்புணர்வு, வாகனப் புகையினால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடு குறித்தான விழிப்புணர்வு பிரச்சார சைக்கிள் பேரணியில் திருவாரூர் முதல் சென்னை வரை (360 கீ.மீ.) பங்கு கொண்டு நிறைவு செய்த ஒளிவரன் தன்னாவலர்களுக்கு பாராட்டு விழா கஸ்தூர்பா காந்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைப்பெற்றது.ஒளிரவன் பவுண்டேஷன் நிறுவன தலைவர் குணசேகரன் தலைமையில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் கஸ்தூர்பா காந்தி கல்வி குழுமத்தின் தாளாளர் சந்திரா முருகப்பன்,நகர மன்ற தலைவர் புவனப்பிரியா செந்தில்,ஒளிரவன் பவுண்டேஷன் பொருளாளர் பிரியதர்ஷினி, அறங்காவலர் ராசைய்யன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட எஸ்.பி கருண் கரட், மாவட்ட சமூகநல அலுவலர் மதி வதனா,அரசு மருத்துவ கல்லூரி துணை முதல்வர் கார்த் தி கே யன், மா வட்ட வளமை தலைமை அலுவலர் நெல்சன், தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மையத்தின் பொதுச்செயலாளர் ரமேஷ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தன்னார்வலர்களுக்கு சான்றிதழ் மற்றும் ஸ்கூல் பேக்கினை வழங்கினார்கள்.மேலும் நிகழ்ச்சியில் குருதிக்கொடை அமைப்பு பிரிவு தன்னார்வலர் பிரபாகரன்,ஒளிரவன் பவுன்டேஷன் மேலாளர் மகேஸ்வரி,களப்பணியாளர்கள் தட்சிணாமூர்த்தி, நவீன்,வேல்முருகன்,வீபவ் மற்றும் பொதுமக்கள்,பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் 75 சதவீத பணிகள் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நிறைவடையும்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்



**சென்னை,ஜூன்.01**

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடைபெறும் 75 சதவீத பணிகள் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாத்தில் நிறைவுடையும்மா என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்

சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில்வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்சார்பில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், 700 புதிய குடியிருப்புகள்,புதிய சமூக நலக்கூடம் மற்றும் விளையாட்டுத் திடல் மேம்படுத்துதல், ஸ்டான்லிஅரசு மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புப்பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறைஅமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தலைவருமான சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து,அனைத்து பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும்ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

அப்போது அமைச்சர் .பி.கே.சேகர்பாபு அளித்த பேட்டியில் கூறியதாவது வடசென்னை வளர்ச்சி திட்டத்திற்கு அதிகமுக்கியத்துவம் தந்து கடந்த 2024 ஆம் ஆண்டு 1000 கோடி என்றுசட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டம் இன்று 6000 கோடியை தாண்டிதிட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்ததிட்டப்பணிகள் குறித்த முன்னேற்றத்தை முதல்வர் ஸ்டாலின் தொடர்ந்து திட்ட பணிகளை காணொளி வாயிலாகவும், அரங்க கூட்டங்கள்வாயிலாகவும் களஆய்வு மேற்கொண்டு எங்களைப் போன்ற ஒருவர்களிடம்கைபேசியிலும் தொடர்பு கொண்டு திட்டப்பணிகள் நிலை குறித்து தொடர்ந்துகண்காணித்து வருகின்றார் .

ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகில் 776 குடியிருப்புகள்கட்டப்பட்டு வருகின்றன. இதுவும் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்ஏற்படுத்தப்பட்டு அந்த பணிகளும் தற்பொழுது ஆய்வு மேற்கொள்ளஇருக்கின்றோம். திட்டங்களை அறிவித்துவிட்டு அந்த திட்டங்களுக்கு தொடக்கவிழாவை நடத்திவிட்டு அமருகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இல்லாமல்தொடர்ந்து அந்த திட்டப்பணிகளைநேர்த்தியோடும் குறிப்பிட்ட கால அளவுக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்கின்ற தொலைநோக்கு பார்வையோடு திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்படுவதால்,இந்த திட்டப் பணிகள் அனைத்தும் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ்மேற்கொள்ளப்பட்ட பணிகள் 70-75 சதவீதம் அளவிற்கு 2026 ஜனவரிமாதத்திற்குள் நிறைவு செய்வதற்கான முனைப்புடன் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றோம். இவ்வாறு அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்

இந்த ஆய்வுகளின்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமுதன்மைச் செயல் அலுவலர் .சிவஞானம்மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா,, சி.எம்.டி.ஏ. கண்காணிப்பு பொறியாளர்.ராஜமகேஷ்குமார், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியகண்காணிப்பு பொறியாளர் .இளம்பருதி, மாநகராட்சி மண்டல அலுவலர்டாக்டர் பரிதா பானு, அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள்உடனிருந்தனர்.

# இந்தியாவில் தற்போது பரவி வரும் கொரோனா தொற்று வீரியம் குறைந்ததாக காணப்படுவதால் பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை: மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆறுதல் தகவல்




**சென்னை,ஜூன்.01**

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் (31.05.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், 2025-26 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் 91ன்படி, கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் செயல் திட்டத்தை மேம்படுத்தும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாமினை தொடங்கி வைத்து விழா பேசினார். பிறகு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் மக்கள் நல்வாழ்வுத்துறையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, 122 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்ட 122 அறிவிப்புகளில் இதுவரை 96 அறிவிப்புகளுக்கான அரசாணைகள் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் 4 அறிவிப்புகள் செயலாக்கம் பெற்று முடிவுற்றிருக்கிறது. அந்த வகையில் அறிவிப்பு எண் 91 இன்று செயலாக்கம் பெற்றிருக்கிறது. அ.எண் 91 என்பது கருவின் தன்மையை வெளியிட தடையும், அச்சட்டத்தினை திறம்பட செயல்படுத்துவது ஆகும். அந்த வகையில் நான்கு மண்டலங்களாக தமிழ்நாட்டைப் பிரித்து சென்னை, கோவை, மதுரை, கன்னியாகுமரி ஆகிய 4 மண்டலங்களில் கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவுரும் தன்மையை தொழில்நுட்ப முறையில் பாலினத் தேர்வை தடை செய்யும் சட்டம் 1994 அதன் செயல்திட்டத்தை மேம்படுத்திடும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி இன்று வழங்கப்படவிருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பாலின தேர்வை தடை செய்தல் சட்டத்தின்படி பதிவு பெற்ற அரசு மற்றும் தனியார் ஸ்கேன் நிலையங்கள் 8922. அதில் சென்னையில் மட்டும் 2059 பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற சமயத்தில் குழந்தை பாலின விகிதம் என்பது 1000 ஆண் குழந்தைகளுக்கு 931 பெண் குழந்தைகள் எனும் விகிதம் இருந்ததை இந்த அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகள் மகப்பேறு இறப்பு விகிதம், குழந்தைகள் பிறப்பு இறப்பு விகிதம் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருவதன் மூலம் 940 பெண் குழந்தைகள் என்று வந்திருக்கிறது. இந்த அரசின் இலக்கு என்பது ஆண் குழந்தைகளுக்கு சரிசமமாக பெண் குழந்தைகள் இருக்க வேண்டும் என்கின்ற இலக்கை எட்டுகின்ற வகையில் இந்த சட்டத்தின் அம்சங்களை அனைவரும் புரிந்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இந்த பயிற்சி முகாம் இன்று தொடங்கி வைக்கப்படுகிறது. மேலும் பாலின தேர்வை தடை செய்தல் சட்டம், online portal இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசு மற்றும் தனியார் ஸ்கேன் சென்டர்களில் புதிய விண்ணப்பங்கள் புதுப்பித்தல் மற்றும் கட்டணம் செலுத்துதல், மருத்துவர்கள் இணைப்பு மற்றும் நீக்கம், ஸ்கேன் இயந்திரங்கள் இணைப்பு மற்றும் நீக்கம் ஆகியவை manual நடைமுறையில் இருந்தது, அது முழுமையாக மாற்றப்பட்டு portal முறையில் மாற்றப்படவிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் தனியார் மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகள் அரசுடன் இணைந்து மகப்பேறு சம்மந்தமான அனைத்து நடைமுறை மற்றும் சிக்கல்களை சட்டப்படி எப்படி கையாள்வது என்பதை தெரிந்து கொள்ளும் வகையில் கையேடு அரசின் சார்பில் வெளியிட்டிருக்கிறோம். மகப்பேறு மருத்துவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றி இக்கையேடு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றுகின்ற மகப்பேறு மருத்துவர்களுக்கு பெரிய அளவில் உறுதுணையாக இருக்கும். இந்த கையேட்டிற்கு உயிர் தரும் தாய்மார்கள் உயிர் வாழ வேண்டும் என்று தலைப்பிடப்பட்ட அந்த கையேடு இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

2020ம் ஆண்டு உலக சுகாதார நிறுவனத்தால் பெருந்தொற்றாக அறிவிக்கப்பட்ட கோவிட்-19, உலகளவில் பெரும்பாதிப்பினை ஏற்படுத்திய போதும், அரசின் மருத்துவ கட்டமைப்பினை மேம்படுத்துதல், பொதுமக்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் மற்றும் தீவிரமாக கோவிட்- 19 தடுப்பூசியினை வழங்கியதன் வாயிலாக, கோவிட்-19 பெருந்தொற்றில் இருந்து மீண்டு, வைரஸின் வீரியம் குறைந்து, தற்போது சமூக பரவலாக மட்டுமே காணப்படுகிறது. 2023 மே 5 அன்று உலக சுகாதார அமைப்பு கோவிட் 19 ன் பொதுச் சுகாதார அவசரநிலை முடிவடைவதாக அறிவித்தது. உலக சுகாதார நிறுவனத்தின் மூலமாக 04.05.2025 அன்று வெளியிடப்பட்ட வாராந்திர தொற்று நோய் குறித்த அறிக்கையின்படி தெற்கு ஆசிய நாடுகளான இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் கோவிட்-19 சமூக பரவலில் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுவதாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், விரீயம் இழந்த ஓமைக்ரான் வகை கொரோனா வைரஸ்களின் வகைகளான JN.1, XEC போன்றவைகளே காணப்படுவதாகவும், புதிதாக எவ்விதமான உருமாறிய கொரோனா வைரஸ்களும் பரவவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகளவில் தற்போது வரை 91,583 கோவிட் தொற்றுகள் பதிவாகி உள்ளன. இந்திய அளவில் 1,800 கோவிட் தொற்றுகள் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டில் மே மாதத்தில் 293 கோவிட் தொற்றுகள் பதிவாகி உள்ளன. அதில் 148 நபர்கள் தற்போது கண்காணிப்பில் உள்ளனர். இந்த ஆண்டு கோவிட்-19 நோய் பரவல் சமூகத்தில் மிக குறைந்த அளவே காணப்படுகிறது. மேலும் நோய் காணப்பட்ட நபர்களுக்கு எவ்வித தீவிர தொற்றிக்கான அறிகுறிகளும் காணப்படவில்லை. முன்னெச்சரிக்கையாக தேவையான மருத்துவ வசதிகள், மனிதவளங்கள், மருந்துகள் மற்றும் பரிசோதனைத் திறன் ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் 99,425 படுக்கைகள் கோவிட் நோயாளிகளுக்கு சிகிச்சைக்காக தயார் நிலையில் உள்ளன. பொது மக்கள் கூட்ட நெரிசலான இடங்களில் முகக்கவசம் அணிவது, இருமும் போதும்/தும்மும் போதும் சரியான சுகாதார வழிமுறைகளை கடைபிடித்தல் மற்றும் கைசுத்தம் பேணுவது அவசியம். காய்ச்சல், சுவாசமண்டலத்தில் தொற்றிற்கான அறிகுறிகள் உள்ளவர்கள் குறிப்பாக இணைநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அருகிலுள்ள மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தமிழ்நாடு அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது, எனவே பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், , தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ்,பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.ராஜமூர்த்தி, கூடுதல் இயக்குநர்கள் மரு.பாலசந்தர், மரு.சித்ரா, இணை இயக்குநர் மரு.மீனாட்சி சுந்தரி மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், இணை இயக்குநர்கள், கலந்து கொண்டனர்.

# நாகப்பட்டினம் மாவட்டத்தில் தொகுப்பூதிய செவிலியராக திருநங்கை தி.ரியாவுக்கு தற்காலிக பணி நியமன ஆணை

## கலெக்டர் ப.ஆகாஷ் வழங்கினார்

**நாகப்பட்டினம்,ஜூன்.01-**



நாகப்பட்டினம் மாவட்ட நலவாழ்வு திட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை சார்பில் வேதாரண்யம் நகர்புற துணை சுகாதார நிலையத்தில் காலியாக உள்ள பணியிடத்தில் முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் செவிலியராக தொகுப்பூதியத்தில் பணி புரிய பி.எஸ்.சி நர்சிங் படித்த திருநங்கை தி.ரியா என்பவருக்கு பணி நியமன ஆணையினை மாவட்;ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. பிரதீப் வாசுதேவன் கிருஷ்ணகுமார், மாவட்ட சமூகநல அலுவலர் கி.திவ்யபிரபா மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தமிழக வெற்றி கழகத்தின் திருமருகல் ஒன்றிய செயலாளர் திமுகவில் இணைந்தார்



நாகப்பட்டினம், ஜூன் 1-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையை ஏற்று தமிழக வெற்றி கழகத்தின் திருமருகல் தெற்கு ஒன்றிய செயலாளர் அ.ஜெகபர் தீன் அக்கட்சியிலிருந்து விலகி நாகை மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். இந்நிகழ்வில் நாகை மாவட்ட துணை செயலாளர் ஆரூர் மணிவண்ணன் மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை அமைப்பாளர் சுல்தான் ஆரிப் மாவட்ட மருத்துவ அணி துணை செயலாளர் மருத்துவர் அ.ஷாஜகான் முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் முத்து முகம்மது, தமுமுக கிளை செயலாளர் அஷ்ரப் அலி மற்றும் அமானுல்லா ரியாஸ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு திறன் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சி

## தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தகவல்

**சென்னை ஜூன் 01-**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு திறன் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சி திட்டங்கள் வழங்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஜி.எஸ்.டி மற்றும் வருமான வரி தொழில் நுட்ப பயிற்சி தொழில் உற்பத்தி பயிற்சி 4.0), டிஜிட்டல் திறன்களில் மற்றும் பிபிஓ பயிற்சி யுஐ/யு எக்ஸ் இணைய தொழில் நுட்ப பயிற்சி டிஜிட்டல் மார்க்கெட்டிங் ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் சேர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களாகவும், 21 முதல் 30 வயது வரை உள்ளவர்களாகவும், 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆண்டு வரையில் இளங்கலை அல்லது முதுகலை பட்டப்படிப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு சான்றிதழ் மற்றும் வேலை வாய்ப்பு வழி வகை செய்யப்படும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சியினை பெற தாட்கோ இணையதளமான (www.tahdco.com) என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம். இப்பயிற்சிக்கான கால அளவு 55 நாட்கள் ஆகும். மேலும் சென்னையில் உள்ள விடுதியில் தங்கி படிக்கும் வசதி மற்றும் உணவுக்கான செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

# அரும்பாக்கம் பகுதியில் உதவி இயக்குனரை காரில் கடத்திய 5 பேர் கைது

**சென்னை ஜூன் 01-**

சென்னை, அரும்பாக்கம் பகுதியில் வசித்து வரும் சுசீந்திரன் என்பவர் சினிமா துறையில் இயக்குநராக உள்ளார். சுசீந்திரனிடம் உதவி இயக்குநராக பணிபுரிந்து வரும் ராஜகுமரன் என்பவர் கடந்த 29.ந் தேதி அன்று மதியம் முதல் காணவில்லை என்று, கடந்த 29.ந் தேதி அன்று இரவு, அரும்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமயிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி ராஜகுமரனை தேடி வந்த நிலையில், ராஜகுமரன் கடந்த நேற்று முன் தினம் காவல் நிலையம் ஆஜராகி, தன்னை 5 நபர்கள் சேர்ந்து காரில் கடத்தி, கையால் தாக்கி, மிரட்டி விட்டு, இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை பறித்துக் கொண்டு, மீண்டும் தன்னை காரில் இருந்து இறக்கிவிட்டு சென்றதாக தெரிவித்தார். இச்சம்பவம் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, உடனடி நடவடிக்கை எடுத்திட சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவிட்டதின்பேரில், கூடுதல் காவல் ஆணையர் (வடக்கு) வழிகாட்டுதலின் பேரில், இணை ஆணையர் (மேற்கு மண்டலம்) அறிவுரையின்படி, அண்ணாநகர் துணை ஆணையர் நேரடி மேற்பார்வையில், அரும்பாக்கம் உதவி ஆணையர் மற்றும் ஆய்வாளர் தலைமையில் தனிப்படைகள் அமைக்கப்பட்டு, தனிப்படை போலீசார் மேற்படி ராஜகுமரனை காரில் கடத்த சென்ற நபர்களை கைது செய்ய தீவிர தேடுதல் வேட்டை நடத்தி தொடர்புடைய எதிரிகள் 1.சந்திரசேகர், 2.கார்த்திகேயன், 3.லலித் ஆதித்யா, , 4.திவாகர், 5.அகஸ்டின், ஆகிய 5 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் 1 செல்போன் மற்றும் 1 இருசக்கர வாகனம் உட்பட 7 செல்போன்கள், 2 இருசக்கர வாகனங்கள் மற்றும் பணம் ரூ.29,000/- ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் கடந்த 29. ந் தேதி அன்று மதியம் ராஜகுமரன், அரும்பாக்கம், ரசாக் கார்டன் பகுதியில் டீ குடிப்பதற்காக இருசக்கர வாகனத்தில் வந்த போது, ஒரு கார் ராஜகுமரனின் இருசக்கர வாகனத்தை இடித்து சேதப்படுத்தி, பின்னர் ராஜகுமரனை காரில் கடத்திச் சென்று, காரில் வைத்து, கைகளால் தாக்கியுள்ளனர். மேலும் ராஜகுமரனிடம் அவர் காதலித்து வரும் பெண்ணை மறந்துவிடுமாறு கூறி மிரட்டியுள்ளனர். பின்னர் ராஜகுமரிடமிருந்து இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை பறித்துக் கொண்டு, அவரை காரில் இருந்து இறக்கிவிட்டு, தப்பிச் சென்றதுதெரியவந்தது. மேற்படி கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய மற்ற தலைமறைவு எதிரிகளை பிடிக்க தனிப்படை போலீசார் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

# சென்னையில் மெட்ரோ குடிநீர் லாரிகள் ஸ்டிரைக் ஒத்திவைப்பு

**சென்னை ஜூன் 01-**

சென்னையில் மெட்ரோ குடிநீர் லாரி உரிமையாளர்கள் அறிவித்த வேலைநிறுத்தம் 4 நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 2024 பிப்ரவரியுடன் ஒப்பந்தம் முடிந்த நிலையில் மீண்டும் புதிய ஒப்பந்தத்தை அறிவிக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த நவம்பரில் ஒப்பந்தம் குறித்து அறிவிப்பு வெளியிட்டும் இறுதி செய்யப்படவில்லை என புகார் எழுந்த நிலையில், சென்னையில் சுமார் 450 மெட்ரோ குடிநீர் ஒப்பந்த லாரிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவதாக அறிவித்திருந்தனர்.

**BEFORE THE DEPUTY REGISTRAR OF CHITS, DISTRICT REGISTRAR'S OFFICE, SALEM WEST**
**A.R.C.No.73/2024**

**M/s. D.N.C.CHITS Private Limited,**
No.101H, Saradha College Main Road, Alagapuram, Salem -16.
...Disputant
/Vs/
**1. G.KANGEYAN S/o. GURUNATHAN**
No. 122, West Street, Keelapalaiyar, Kumbakonam (TK), Thenampadugai, Thanjavur - 612 703.
**2.K.GOKILA W/o. KANGEYAN**
No. 122, West Street, Keelapalaiyar, Kumbakonam (TK), Thenampadugai, Thanjavur - 612 703.
**3. K.DRAVIDASELVAN S/o. KALIYAPERUMAL**
No. 250, Main Road, Pambappadaiyur, Kumbakonam (TK), Ariyapadaiveedu, Thanjavur - 612 703.
**4. S.RAJASEKARAN S/o. SIVARAMAN**
No. 25/36, Palaiya Aranmanai Street, Kumbakonam, Thanjavur - 612 001.
**5. T.KRISHNAVENI W/o.TAMILSELVAN**
No. 10/30, South Veethi, Sundaraperumal Kovil, Thenpathi, Kumbakonam, Thanjavur - 614 208.
...Opponents

**SUMMONS TO THE OPPONENTS**

Please take notice that the above - Disputant has filed the above claim for **Rs.6,75,119/-** with subsequent interest and cost against you and others due under the chit Group No. **SLC/10L/20 Ticket No. 34**. The above case is posted to **09.06.2025** for your appearance. If you fail to appear before this honourable court for the hearing on **09.06.2025 at 11.00 A.M.** either in person or through your advocate, the matter will be decided exparte.

**DEPUTY REGISTRAR OF CHITS, SALEM WEST.**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், முசிறி.**
**மனு எண்.அ3/5303/2024**

**வடிவேல்,**
**த/பெ.லேட்.ராவுத்தன்,**
**நெ.34, ஆண்டார்புரம் ரோடு,**
**காந்தி நகர், காட்டுப்புத்தூர் கிராமம் மற்றும் அஞ்சல், தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம்.**
**– மனுதாரர்**
**– எதிர் –**
**வட்டாட்சியர், தொட்டியம்.**
**– எதிர்மனுதாரர்**

**அறிவிப்பு**

**மேற்படி மனுதாரரின் தாயார் “பழனியம்மாள்” க/பெ.ராவுத்தன் என்பவர் மேற்படி விலாசத்தில் கடந்த 03.05.1970 ஆம் ஆண்டு அவரது இல்லத்தில் இறந்தார் என்பதை பதிவு செய்யக்கோரி மனு செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்திடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.**

**R.வடிவேல்,**
**மனுதாரர், தொட்டியம்.**

**வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், கரூர்.**
**மனு எண்.ந.க.அ2/3522/2025**

**சிவனேசன்,**
**த/பெ.கலியபெருமாள்,**
**930/9, பேங்க் வையாபுரிபுரம்,**
**ஆண்டாங்கோவில் கிழக்கு கிராமம், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம்.**
**– மனுதாரர்**
**– எதிர் –**
**வட்டாட்சியர், மண்மங்கலம்.**
**– எதிர்மனுதாரர்**

**அறிவிப்பு**

**மேற்படி மனுதாரர் தனது மகள் “கனிஷ்கா” த/பெ.சிவனேசன் என்பவர் மேற்படி முகவரியில் கடந்த 21.09.2011 தேதியில் பிறந்ததை எதிர்மனுதாரர் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் தங்களது ஆட்சேபனைகளை 7 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக உத்தரவாகி விடும் என்பதை அறியவும்.**

**க.சிவனேசன்,**
**மனுதாரர், மண்மங்கலம்.**

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**BEFORE THE DEPUTY REGISTRAR OF CHITS, DISTRICT REGISTRAR'S OFFICE, SALEM WEST.**
**A.R.C.No. 81/2024**

**M/s. D.N.C.CHITS Private Limited,**
No.101H, Saradha College Main Road, Alagapuram, Salem - 636016.
...Disputant
/Versus/
**1. S.KARTHIKEYAN S/o. SRINIVASAN**
No. 2/224, Athi Thiravidar Street, Vandandi, Papanasam TK, Kumilakudi, Thanjavur - 613 502.
**2. K.ELAKKIYA W/o. KARTHIKEYAN**
No. 2/224, Athi Thiravidar Street, Vandandi, Papanasam TK, Kumilakudi, Thanjavur - 613 502.
**3. V.MUTHAMIL MUTHALVAN S/o. VEERAMANI**
No. 1614, TCWS Colony, Birunthavanam, Thanjavur TK, Kalimedu, Melavelithottam, Thanjavur - 613 002.
...Opponents.

**SUMMONS TO THE OPPONENTS**

Please take notice that the above - Disputant has filed the above claim for **Rs.1,40,496/-** with subsequent interest and cost against you and others due under the chit Group No. **SLC/2L/44 Ticket No. 20**. The above case is posted to **12.06.2025** for your appearance. If you fail to appear before this honourable court for the hearing on **12.06.2025 at 11.00 A.M.** either in person or through your advocate, the matter will be decided exparte.

**DEPUTY REGISTRAR OF CHITS, SALEM WEST.**

**BEFORE THE DEPUTY REGISTRAR OF CHITS, DISTRICT REGISTRAR'S OFFICE, SALEM WEST.**
**A.R.C.No. 90/2024**

**M/s. D.N.C.CHITS Private Limited,**
No.101H, Saradha College Main Road, Alagapuram, Salem - 636016.
...Disputant
/Versus/
**1. F1 CARS BY ITS PROPRIETOR RAMYA**
ADD: Erode Main Road, Reddipalayam, Karur - 639002.
**2. P.MOHAN S/o. PONNUSAMY**
ADD: Thirumal Nagar, 3rd Street, Andan Kovil west, Karur - 639002.
**3. E.SHANMUGAM S/o. ERULAN**
No. F 206, TNPL Colony, Kagithapuram, Karur - 639136.
**4. RAMYA W/o. MOHAN**
No. 13/8C, Neelemeatusanthu, Karur - 639 001.
...Opponents.

**SUMMONS TO THE OPPONENTS**

Please take notice that the above - Disputant has filed the above claim for **Rs.1,22,105/-** with subsequent interest and cost against you and others due under the chit Group No. **SLC/2L/46 Ticket No. 13**. The above case is posted to **12.06.2025** for your appearance. If you fail to appear before this honourable court for the hearing on **12.06.2025 at 11.00 A.M.** either in person or through your advocate, the matter will be decided exparte.

**DEPUTY REGISTRAR OF CHITS, SALEM WEST.**

**BEFORE THE DEPUTY REGISTRAR OF CHITS, DISTRICT REGISTRAR'S OFFICE, SALEM WEST.**
**A.R.C.No. 83/2024**

**M/s. D.N.C.CHITS Private Limited,**
No.101H, Saradha College Main Road, Alagapuram, Salem - 636016.
...Disputant
/Versus/
**1. DEVI W/o. BABU**
No. 25-02, Nallanguttai Santhu, Mannargudi Taluka, Thiruvarur - 614001.
**2. BABU S/o. SAMINATHAN**
No.23/2, Kasukarachitty Street, Mannargudi Taluka, Thiruvarur - 614001.
**3. ARIVUKKARASU S/o. LAKSHMANAN**
No. 1/92B, South Middle Street, EDA, Melaiyur 2, Thiruvarur - 614013.
...Opponents.

**SUMMONS TO THE OPPONENTS**

Please take notice that the above - Disputant has filed the above claim for **Rs.1,46,127/-** with subsequent interest and cost against you and others due under the chit Group No. **SLC/5L/25 Ticket No. 25**. The above case is posted to **12.06.2025** for your appearance. If you fail to appear before this honourable court for the hearing on **12.06.2025 at 11.00 A.M.** either in person or through your advocate, the matter will be decided exparte.

**DEPUTY REGISTRAR OF CHITS, SALEM WEST.**

**BEFORE THE DEPUTY REGISTRAR OF CHITS, DISTRICT REGISTRAR'S OFFICE, SALEM WEST**
**A.R.C.No.14/2024**

**M/s. D.N.C.CHITS Private Limited,**
No.101H, Saradha College Main Road, Alagapuram, Salem -16.
...Disputant
/Vs/
**1. T. VASANTHI W/o. THIYAGARAJAN**
No. 284, South Street, Perungudi, Melamaravathy, Valangaiman, Thiruvarur - 612 801.
**2. K.THIYAGARAJAN S/o. KALIMUTHU**
No. 284, South Street, Perungudi, Melamaravathy, Valangaiman, Thiruvarur - 612 801.
**3. M.ILAIYARAJA S/o. MUNIYANDI**
No. 104/A, 1st Street, Surakkudi, Valangaiman Taluk, Padagacheri, Thiruvarur - 612 804.
...Opponents

**SUMMONS TO THE OPPONENTS**

Please take notice that the above - Disputant has filed the above claim for **Rs.1,05,361/-** with subsequent interest and cost against you and others due under the chit Group No. **SLC/2L/21 Ticket No. 15**. The above case is posted to **09.06.2025** for your appearance. If you fail to appear before this honourable court for the hearing on **09.06.2025 at 11.00 A.M.** either in person or through your advocate, the matter will be decided exparte.

**DEPUTY REGISTRAR OF CHITS, SALEM WEST.**

## பிளே ஆப் சுற்று போட்டியில் அதிக ரன்கள்:
# மும்பை-குஜராத் அணிகள் இணைந்து புதிய சாதனை

**முல்லான்பூர், ஜூன் 01-**

பிளே ஆப் சுற்று போட்டியில் அடிக்கப்பட்ட அதிக ரன்கள் என்ற சாதனையை மும்பை - குஜராத் அணிகள் இணைந்து படைத்துள்ளன.



**228 ரன்கள் குவிப்பு...**

ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் மாநிலம் முல்லான்பூரில் நடந்த வெளியேற்றுதல் (எலிமினேட்டர்) சுற்று ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி 5 விக்கெட்டுக்கு 228 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ரோகித் சர்மா 81 ரன்கள் அடித்தார். குஜராத் அணி தரப்பில் பிரசித் கிருஷ்ணா, சாய் கிஷோர் தலா 2 விக்கெட்டும், முகமது சிராஜ் ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

**மும்பை அணி வெற்றி...**

இதைத்தொடர்ந்து 229 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி ஆடிய குஜராத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 208 ரன்களே எடுத்தது. இதனால் மும்பை அணி 20 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 2-வது தகுதி சுற்றுக்கு முன்னேறியது. குஜராத் தரப்பில் சாய் சுதர்சன் 80 ரன்கள் அடித்தார். மும்பை அணி தரப்பில் டிரென்ட் பவுல்ட் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். ரோகித் சர்மா ஆட்ட நாயகன் விருது வென்றார்.

**வரலாற்று சாதனை...**

இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் சேர்ந்து மொத்தம் 436 ரன்கள் அடித்துள்ளன. இதன் மூலம் 18 ஆண்டு கால ஐ.பி.எல். வரலாற்றில் பிளே ஆப் சுற்றின் ஒரு போட்டியில் அடிக்கப்பட்ட அதிக ரன்களாகும்.

இந்த சாதனையை மும்பை இந்தியன்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் இணைந்து படைத்துள்ளன.

**அதிக ரன்கள் எடுத்த அணிகள்:**

1. மும்பை - குஜராத் - 436 ரன்கள்.
2. பஞ்சாப் - சென்னை - 428 ரன்கள்.
3. ஐதராபாத் - பெங்களூரு - 408 ரன்கள்.
4. குஜராத் - மும்பை - 404 ரன்கள்.
5. பெங்களூரு - லக்னோ - 400 ரன்கள்.

# ஒரே போட்டியில் ரோகித் 3 சாதனைகள்

**முல்லான்பூர், ஜூன் 01-**

ஐ.பி.எல். தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் முன்னாள் கேப்டன் ரோகித் சர்மா பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

**மும்பை வெற்றி...**

'எலிமினேட்டர்' ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் 20 ரன்கள் வித்தியாசத்தில் குஜராத் டைட்டன்ஸை நேற்று முன்தினம் இரவு வீழ்த்தியது. இந்தப் போட்டியில் ரோகித் சர்மா 50 பந்துகளில் 81 ரன்கள் அடித்து அசத்தினார். இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதும் வென்றார்.

**ரோகித் சாதனை...**

ரோகித் சர்மா இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடியதன் மூலம் 3 புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். இந்த சீசனில் ஏற்ற இறக்கங்களோடு விளையாடிய இவரை ரசிகர்கள் ஹிட்மேன் என ஏன் அழைக்கின்றார் என இந்தப் போட்டியில் நிரூபித்து காட்டினார். இந்த வெற்றியின் மூலமாக மும்பை இந்தியன்ஸ் 'குவாலிஃபயர் 2'-வில் பஞ்சாப் கிங்ஸை சந்திக்கிறது.

**300 சிக்ஸர்கள்**

1) கெயில் - 357.
2) ரோகித் - 302.
3) கோலி - 291.
4) தோனி - 264.
5) ஏபிடி - 251.

**7,000 ரன்கள்...**

ஐ.பி.எல். தொடரில் 266 இன்னிங்ஸில் விளையாடி 7,038 ரன்களை குவித்துள்ளார். ஐ.பி.எல். வரலாற்றில் இதுதான் 2-ஆவது அதிக பட்ச ரன்களாகும். முதலிடத்தில் கோலி 8,618 ரன்களுடன் இருக்கிறார்.

**அதிக ஆட்ட நாயகன் விருது...**

ஐ.பி.எல். வரலாற்றில் அதிகபட்ச ஆட்ட நாயகன் விருது வாங்கியவர்களில் 3-ஆம் இடம் பிடித்துள்ளார். இந்தியர்கள் வரிசையில் முதலிடத்தையும் தக்கவைத்துள்ளார். ஏபிடி வில்லியர்ஸ் - 25, கிறிஸ் கெயில் - 22, ரோகித் சர்மா - 21, விராட் கோலி - 19. ஐ.பி.எல். வரலாற்றில் அதிக சிக்ஸர்கள் (302)அடித்தவர்கள் பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ளார். 357 சிக்ஸர்களுடன் கிறிஸ் கெயில் முதலிடத்தில் இருக்கிறார்.

# வெற்றிக்கு காரணம் பும்ரா: கேப்டன் ஹர்திக் பாண்ட்யா

**முல்லான்பூர், ஜூன் 01-**

ஆட்டத்தின் முக்கியமான தருணத்தில் சிக்கன பந்துவீச்சை வெளிப்படுத்திய ஜஸ்பிரித் பும்ரா தான் வெற்றிக்கு காரணம் என்று மும்பை கேப்டன் ஹர்திக் பாண்ட்யா பாராட்டியுள்ளார்.

**228 ரன்கள்...**

ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் மாநிலம் முல்லான்பூரில் நேற்று முன்தினம் இரவு நடந்த வெளியேற்றுதல் (எலிமினேட்டர்) சுற்று ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி 5 விக்கெட்டுக்கு 228 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ரோகித் சர்மா 81 ரன்கள் அடித்தார். குஜராத் அணி தரப்பில் பிரசித் கிருஷ்ணா, சாய் கிஷோர் தலா 2 விக்கெட்டும், முகமது சிராஜ் ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

**2-வது தகுதி சுற்றுக்கு...**

இதைத்தொடர்ந்து 229 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி ஆடிய குஜராத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 208 ரன்களே எடுத்தது. இதனால் மும்பை அணி 20 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 2-வது தகுதி சுற்றுக்கு முன்னேறியது. குஜராத் தரப்பில் சாய் சுதர்சன் 80 ரன்கள் அடித்தார். மும்பை அணி தரப்பில் டிரென்ட் பவுல்ட் 2 விக்கெட்டுகள் வீழ்த்தினார். ரோகித் சர்மா ஆட்ட நாயகன் விருது வென்றார். இந்த தோல்வியின் மூலம் குஜராத் அணி வெளியேறியது. மும்பை அணி அடுத்து இறுதிப்போட்டிக்கான 2-வது தகுதி சுற்றில் பஞ்சாப் அணியை ஆமதாபாத்தில் இன்று சந்திக்கிறது.

**பும்ரா காரணம்...**

இந்நிலையில் இந்த ஆட்டத்தின் முக்கியமான தருணத்தில் வாஷிங்டன் சுந்தரின் விக்கெட்டை கைப்பற்றி சிக்கன பந்துவீச்சை வெளிப்படுத்திய ஜஸ்பிரித் பும்ரா தான் வெற்றிக்கு காரணம் என்று மும்பை கேப்டன் ஹர்திக் பாண்ட்யா பாராட்டியுள்ளார். இது குறித்து அவர் பேசுகையில், "இந்த ஆட்டம் ஒரு கட்டத்தில் சமநிலையில் இருந்தது. இரண்டாவது இன்னிங்சில் பிட்ச் பேட்டிங் செய்ய நன்றாக இருந்தது என்று நினைக்கிறேன். எங்கள் அணிக்காக அறிமுகமான ஜானி பேர்ஸ்டோ அதிரடியாக விளையாடி போட்டியைத் தொடங்கினார். ரோகித் சர்மா நேரத்தை எடுத்துக் கொண்டாலும் சிறப்பாக செயல்பட்டார். இது போன்ற முக்கியமான போட்டிகளில் அது போன்ற விளிம்புகள் வெற்றிக்கு உதவும். எங்கள் அணியில் அனைவரும் சிறப்பாக பந்துவீசினர்.

**விலைமதிக்கவர்...**

குறிப்பாக பும்ரா. அவர் தான் வெற்றிக்கு காரணம். மும்பையில் விற்கும் வீட்டு மனை போன்றது பும்ரா விலைமதிக்கவர். அவரிடம் பந்தை கொடுப்பது மட்டுமே என்னுடைய வேலையாக இருந்தது. அதே சமயம் கடைசி நேரத்தில் அவர் வந்து பவுலிங் செய்வதற்கு நாங்கள் பேட்டிங்கில் கொஞ்சம் எக்ஸ்ட்ரா ரன்களை எடுப்பது முக்கியம். கடைசியில் பும்ரா அந்த முக்கியமான ஓவரை வீசினால் வெற்றிக்கான விளிம்பு அதிகரிக்கும். தோல்வியிலிருந்து மீண்டு வருவது மிகவும் முக்கியம். தற்போது நாங்கள் அடுத்த ஆட்டத்தை எதிர்நோக்கியுள்ளோம்" என்று கூறினார்.

# சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்த கில்

**முல்லான்பூர், ஜூன் 01-**

ஹர்திக் பாண்ட்யாவுடன் மோதல் என்ற சர்ச்சை செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக சுப்மன் கில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

**228 ரன்கள் குவிப்பு...**

ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் மாநிலம் முல்லான்பூரில் நேற்று முன்தினம் இரவு நடந்த எலிமினேட்டர் சுற்று ஆட்டத்தில் சுப்மன் கில் தலைமையிலான குஜராத் டைட்டன்ஸ் அணி, ஹர்திக் பாண்ட்யா தலைமையிலான மும்பை இந்தியன்சை எதிர்கொண்டது. இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த மும்பை அணி 5 விக்கெட்டுக்கு 228 ரன்கள் குவித்தது.

**மும்பை அணி வெற்றி...**

இதைத்தொடர்ந்து 229 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி ஆடிய குஜராத் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கு 208 ரன்களே எடுத்தது. இதனால் மும்பை அணி 20 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 2-வது தகுதி சுற்றுக்கு முன்னேறியது.

**ஆக்ரோஷமாக...**

முன்னதாக ஒவ்வொரு போட்டியிலும் டாஸ் போடப்பட்ட பின் இரு அணியின் கேப்டன்களும் கை குலுக்குவது வழக்கம். ஆனால் இந்த ஆட்டத்தில் டாஸ் போட்ட பின் ஹர்திக் பாண்ட்யா கை கொடுக்க வந்தபோது, சுப்மன் கில் விலகி சென்றுவிட்டார்.

**முற்றுப்புள்ளி...**

இந்நிலையில் இந்த செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக சுப்மன் கில் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், ஹர்திக் பாண்ட்யாவுடன் ஐ.பி.எல். மற்றும் சர்வதேச போட்டிகளில் ஒன்றாக இருக்கும் புகைப்படத்தை இணைத்து 'அன்பைத் தவிர வேறொன்றுமில்லை. இணையத்தில் நீங்கள் பார்க்கும் அனைத்தையும் நம்பாதீர்கள்' என்ற வாசகத்துடன் பதிவிட்டுள்ளார்.

## இந்திய மகளிர் அணிக்கு வெள்ளி

26-வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி தென்கொரியாவில் உள்ள குமி நகரில் நடந்து வருகிறது. இதில் 43 நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

இதில் 5-வது நாளான நேற்று நடைபெற்ற மகளிருக்கான 4*100மீ தொடர் ஓட்டத்தில் இந்திய அணி வெள்ளிப்பதக்கம் வென்று அசத்தியது. வெற்றி பெற்ற இந்திய அணியில் தமிழக வீராங்கனை அபிநயா இடம்பெற்றுள்ளார். மேலும் நேற்று நடைபெற்ற மகளிருக்கான 800மீ ஓட்டத்தில் இந்திய வீராங்கனை பூஜா வெண்கலப்பதக்கம் வென்றார்.

## இந்தியா ஏ அணியில் கே.எல்.ராகுல்

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் (ஜூன்) முதல் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஜூன் 20-ந் தேதி லீட்சில் தொடங்குகிறது. இந்த தொடரில் இந்திய அணி புதிய டெஸ்ட் கேப்டன் சுப்மன் கில் தலைமையில் விளையாட உள்ளது. இந்த தொடருக்கான இந்திய அணியில் முன்னணி வீரரான கே.எல்.ராகுல் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில் முன்னணி வீரரான கே.எல்.ராகுல் இந்த தொடருக்கு தயாராகும் பொருட்டு அதிரடி முடிவை எடுத்துள்ளார். அதன்படி, இந்தியா ஏ - இங்கிலாந்து லயன்ஸ் இடையிலான 2-வது ஆட்டத்தில் தான் விளையாட விரும்புவதாக தேர்வுக்குழு தலைவரிடம் கே.எல். ராகுல் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது. அகர்கரும் அதற்கு அனுமதி அளித்ததாகவும் இதனால் கே.எல்.ராகுல் வரும் திங்களன்று இங்கிலாந்து புறப்பட்டு சென்று 2-வது போட்டியில் களமிறங்க உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## ரஷித்கான் மோசமான சாதனை

ஐ.பி.எல். தொடரில் முல்லன்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெளியேற்றுதல் சுற்று ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் ஆடின.

முதலில் பேட்டிங் செய்த மும்பை 20 ஓவரில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 228 ரன்கள் குவித்தது. தொடர்ந்து 229 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 208 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 20 ரன் வித்தியாசத்தில் மும்பை வெற்றி பெற்றது.

இந்நிலையில், இந்த ஆட்டத்தில் குஜராத் சுழற்பந்து வீச்சாளர் ரஷித் கான் 4 ஓவர் பந்து வீசி 2 சிக்சருடன் 31 ரன்கள் விட்டுக்கொடுத்தார். நடப்பு தொடரில் அவர் இதுவரை 33 சிக்சர்களை வாரி வழங்கி இருக்கிறார். இதன் மூலம் ஐ.பி.எல். போட்டியில் ஒரு சீசனில் அதிக சிக்சர்களை விட்டுக்கொடுத்த வீரர் என்ற மோசமான சாதனைக்கு ரஷித் கான் சொந்தக்காரரர் ஆனார். இதற்கு முன்பு 2022-ம் ஆண்டு முகமது சிராஜ் தனது பந்து வீச்சில் 31 சிக்சர் வழங்கியதே அதிகபட்சமாக இருந்தது.

## கேமிங் செயலிகளுக்கு நோட்டீஸ்

18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்நிலையில், ஐ.பி.எல். சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்த 15 செயலிகளுக்கு தமிழ்நாடு ஆன்லைன் கேமிங் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

ஐ.பி.எல். சூதாட்டத்தை, பங்குச்சந்தை வர்த்தகம் போன்று விளம்பரம் செய்து பொதுமக்களை ஏமாற்றியதாக 15 ஆன்லைன் கேமிங் நிறுவனங்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இதில் பிரோபோ, எம்.பி.எல் மற்றும் ஸ்போர்ட்ஸ் பாஸி போன்ற முக்கிய நிறுவனங்களும் அடங்கும். இது தொடர்பாக ஏற்கனவே பங்குச்சந்தை ஒழுங்குபடுத்தல் அமைப்பான செபி எச்சரிக்கை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## அதிக ரன்கள்: சுதர்சன் சாதனை

ஐ.பி.எல். தொடரின் பிளே ஆப் சுற்றுகள் நடைபெற்று வருகிறது. சண்டிகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற எலிமினேட்டர் சுற்றில் மும்பை இந்தியன்ஸ், குஜராத் டைட்டன்ஸ் அணியை 20 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் மும்பை அணி தகுதிச்சுற்று 2-க்கு முன்னேறியது. இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய சாய் சுதர்சன் 80 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். இதன் மூலம் ஒரு ஐ.பி.எல். சீசனில் அதிக ரன் குவித்த இந்திய வீரர்கள் பட்டியலில் சாய் சுதர்சன். 3வது இடத்தை பிடித்து அசத்தியுள்ளார்.

ஒரு ஐ.பி.எல். சீசனில் அதிக ரன் குவித்த இந்திய வீரர்கள் பட்டியலில் விராட் கோலி (973 ரன்கள்) சுப்மன் கில் (890 ரன்கள்) ஆகியோர் முதல் 2 இடங்களில் உள்ள நிலையில், இந்த சீசனில் 759 ரன்கள் அடித்து சாய் சுதர்சன்.3வது இடத்தை பிடித்துள்ளார்.

மேலும் ஒரு ஐ.பி.எல். சீசனில் 700 ரன்களுக்கு மேல் குவித்த இளம் வீரர் என்ற சாதனையையும் சாய் சுதர்சன் (23) படைத்துள்ளார். நடப்பு ஐ.பி.எல். தொடரின் ஆரஞ்ச் தொப்பி ரேஸிலும் சாய் சுதர்சன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கால்பந்து கழகத்தலைவருடன் ஜெய்ஷா

கிரிக்கெட் இந்தியாவில் பிரபலமான விளையாட்டாக இருந்தாலும் உலக அளவில் கால்பந்து போட்டிக்கே ரசிகர்கள் அதிகமாக இருக்கிறார்கள். பி.சி.சி.ஐ. செயலராக கடந்த 5 ஆண்டுகளாக பதவி வகித்த ஜெய் ஷா கடந்த டிச.2024 முதல் ஐ.சி.சி.யின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சமீபத்தில் 2028 லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட்டும் சேர்க்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சாம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டி நடைபெறும் நிலையில், அதனை நடத்தும் யு.இ.எப்.ஏ. தலைவரைச் சந்தித்து பேசியுள்ளார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் ஜெய் ஷா கூறியதாவது: சாம்பியன்ஸ் லீக் இறுதிப் போட்டிக்கு முன்பாக கிரிக்கெட்டை பிரதிநிதிப்படுத்தவும் யு.இ.எப்.ஏ. தலைவருடன் கலந்துரையாடியது பெருமையாக இருக்கிறது. கிரிக்கெட்டை உலக அரங்கிற்கு கொண்டு செல்லும் ஐ.சி.சி.யின் முனைப்பின் போது அடுத்த விளையாட்டின் தலைவர்களுடன் நேரம் செலவிடுவது எப்போதும் மதிப்பு மிக்கது எனக் கூறியுள்ளார்.

# கேரளாவில் மாஸ்க் கட்டாயம்: முதல்வர் பினராயி அறிவுறுத்தல்

**திருவனந்தபுரம், ஜூன் 01-**

கேரளாவில் முகக்கவசம் கட்டாயம் என முதல் மந்திரி பினராயி விஜயன் தெரிவித்தார்.

இந்தியாவில் கேரளா, கர்நாடகா, குஜராத் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் கொரோனா பரவல் தற்போது அதிகரித்து வருகிறது.இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. தேசிய அளவில் கேரளாவில்தான் கொரோனா தொற்று அதிகமாக பதிவாகியுள்ளது. தற்போதுவரை 727 பேருக்கு அங்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இந்நிலையில், கேரளாவில் முகக் கவசம் கட்டாயம் என அம்மாநில முதல்-மந்திரி பினராயி விஜயன் தெரிவித்துள்ளார் . சளி, இருமல், தொண்டை வலி இருப்பவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும் என பினராயி விஜயன் தெரிவித்துள்ளார். முதியவர்கள், கர்ப்பிணிகள், முன்களப் பணியாளர்களும் மாஸ்க் அணியுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.



**பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வழிநெடுகிலும் பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.**

# தற்காலிக ஆசிரியர்கள் பணி நியமனத்திற்கு தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறை அனுமதி

**சென்னை, ஜூன் 01-**

தற்காலிக ஆசிரியர்கள் பணி நியமனத்திற்கு பள்ளிக் கல்வித் துறை அனுமதி வழங்கியுள்ளது.

அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி, முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்களில் தற்காலிக ஆசிரியர்களை பள்ளிகள் திறக்கும் முதல் நாளில் நியமனம் செய்து கொள்வதற்கு பள்ளிக்கல்வித் துறை அனுமதி வழங்கி உள்ளது.

அதனை பள்ளி மேலாண்மைக் குழு மூலம் மேற்கொள்ளவும், அவ்வாறு நியமனம் செய்யும் போது பின்பற்றவேண்டிய நிபந்தனைகள் குறித்தும் கல்வித் துறை சில தகவல்களை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:- மகப்பேறு விடுப்பில் உள்ள ஆசிரியர் பணியிடங்கள், நீண்ட நாள் விடுப்பில் உள்ள ஆசிரியர் பணியிடங்கள், மாற்றுப் பணியில் சென்றுள்ள ஆசிரியர் பணியிடங்களில் பள்ளி மேலாண்மை குழு மூலம் தற்காலிக ஆசிரியர்களை நியமிக்க வேண்டும்.

பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தில் பி.எட். தேர்ச்சியுடன் ஆசிரியர் தகுதித்தேர்விலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கே முன்னுரிமை வழங்க வேண்டும். முதுகலை ஆசிரியர் பணியிடத்துக்கு பாடம் சார்ந்த தகுதிவாய்ந்த முதுகலை பட்டம் பி.எட். தேர்ச்சி பெற்றவர்களை நியமிக்கலாம். பள்ளி மேலாண்மைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். இதில் எந்தவித புகாருக்கு இடமளிக்காத வண்ணம் பணிநியமனத்தை தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ளவேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது
## மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் திட்டவட்டம்

**புதுடெல்லி, ஜூன் 01-**

அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு இந்தியா அடிபணியாது என்றும், பயங்கரவாதத்திற்கு கடுமையாக பதிலடி கொடுக்கப்படும் என்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

குஜராத்தின் வதோதராவில் நடந்த ஒரு நிகழ்வில் பேசிய அமைச்சர் ஜெய்சங்கர், "ஏப்ரல் 22 நடத்தப்பட்ட பஹல்காம் பயங்கரவாத தாக்குதல், ஜம்மு காஷ்மீரின் சுற்றுலாவை சேதப்படுத்துவதையும், மத பதற்றத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்ட தீய வடிவமைப்பாக இருந்தது. இந்த காட்டுமிராண்டித்தனத்திற்கு ஒரு முன்மாதிரியான பதில் தேவைப்பட்டது. இது பாகிஸ்தானில் பஹாவல்பூர் மற்றும் முரிட்கே உள்ளிட்ட இடங்களில் உள்ள பயங்கரவாத கட்டளை மையங்களை அழிப்பதன் மூலம் வழங்கப்பட்டது.

பயங்கரவாதத்தை தங்கள் நோக்கங்களுக்காக ஆதரிப்பவர்கள், வளர்ப்பவர்கள் மற்றும் பயன்படுத்துபவர்கள் அதிக விலை கொடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. நாங்கள் ஒருபோதும் அணு ஆயுத மிரட்டலுக்கு அடிபணிய மாட்டோம். இந்தியாவின் தேசிய நலனுக்காகவே எந்த முடிவுகளும் எடுக்கப்படுகின்றன, அதுவே தொடர்ந்து எடுக்கப்படும். பயங்கரவாதத்திற்கு எதிராக நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை குறித்து மற்ற நாடுகளிடமிருந்து புரிதலைக் கண்டது மகிழ்ச்சியளிக்கிறது.

நமது வளங்கள் குறைவாக இருக்கலாம், ஆனால் இந்தியா பரந்த மனப்பான்மையைக் கொண்டுள்ளது. உலக நாடுகள் தங்களுக்கு இடையே கலாச்சாரம் மற்றும் மரபுகளுக்கு அதிக மரியாதை அளிக்க வேண்டும். சுமார் 200 நாடுகளைக் கொண்ட சர்வதேச சமூகத்தில், நமக்கு தேசிய நலன் உள்ளது. இயற்கையாகவே அவற்றை முன்னேற்ற முயல்கிறோம். ஆனால் இது பரஸ்பர புரிதல் மற்றும் பரஸ்பர நன்மையை வழிகாட்டும் கொள்கைகளை கொண்டு செய்யப்பட வேண்டும்" என்று அவர் விளக்கினார்.

# தமிழகத்தில் நேற்று ஒரே நாளில் ஓய்வு பெற்ற 8,144 அரசு ஊழியர்கள்

**சென்னை, ஜூன் 01-**

தமிழகத்தில் பல்வேறு அரசு துறைகளில் நேற்று ஒரே நாளில் 8,144 பேர் பணி ஓய்வு பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு அரசு துறைகளில் பணியாற்றும் ஊழியர்கள் பலரும் நேற்றுடன் ஒரே நாளில் 8,144 பேர் ஓய்வு பெற்றனர். தமிழக அரசின் பல்வேறு துறைகளில் 9 லட்சத்து 42 ஆயிரத்து 941 ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். சுமார் 7 லட்சத்து 33 ஆயிரம் ஊழியர்கள் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். தமிழகத்தில் மாநில அரசு ஊழியர்களின் ஓய்வூதிய வயது 58ல் இருந்து 60 ஆக கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்பட்டது. அதன்படி தற்போது மாநில அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயது 60 ஆகும். ஒவ்வொரு மாதமும் ஊழியர்கள், தாங்கள் பணியில் சேர்ந்த மாதத்தின் அடிப்படையில் ஓய்வு பெற்று வருவார்கள்.

குறிப்பாக மே மாத்தில் தான் அதிகம் பேர் ஓய்வு பெறுவார்கள். அதற்கு முக்கிய காரணம், அரசு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அந்த முழு ஆண்டு முடிவு பெறும் போது மே மாதத்தில் தான் ஓய்வு பெறுவார்கள். அதனடிப்படையில் நேற்றுடன் (31ம் தேதி) ஒரே நாளில் சுமார் 8 ஆயிரத்து 144 பேர் ஓய்வு பெறுகின்றனர். அதாவது மாநில அரசின் குரூப்-ஏ பணியிடங்களில் 424 பேரும், பி பணியிடங்களில் 4 ஆயிரத்து 399 பேரும், சி பணியிடங்களில் 2 ஆயிரத்து 185 பேரும், குரூப்-டி பணியிடங்களில் 1,136 பேரும் ஓய்வு பெறுகிறார்கள். கல்லூரி பேராசிரியர்களை பொறுத்தவரை ஏ பிரிவிலும், ஆசிரியர்களை பொறுத்தவரை பி பிரிவிலும் ஊழியர்களாக இருப்பார்கள்.

இந்தாண்டில் ஒரே மாதத்தில் அதிகம் பேர் ஓய்வு பெறுவது இந்த மாதத்தில் தான். இந்த எண்ணிக்கை மொத்த அரசு ஊழியர்களில் 0.86 சதவீதமாகும். இதில் சில ஊழியர்கள் தாமாக முன் வந்து முன்கூட்டிய திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றிருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளது.

## தனக்குத் தானே கட்டிய கல்லறையில்
# நடிகர் ராஜேஷின் உடல் நல்லடக்கம்

**சென்னை, ஜூன் 01-**

40 வயதில் தனக்குத் தானே கட்டிய கல்லறையில், நடிகர் ராஜேஷின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.;

தமிழ் சினிமாவில் மூத்த நடிகர்களில் ஒருவர் ராஜேஷ் (வயது 75). சமீபகாலமாக உடல்நல பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்த அவர், சென்னை ராமாபுரத்தில் உள்ள தனது இல்லத்தில் ஓய்வு எடுத்து வந்தார். இந்த நிலையில் 3 நாட்களுக்கு முன் அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இதையடுத்து உறவினர்கள் அவரை அருகேயுள்ள ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். ஆனால் ஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியிலேயே அவரது உயிர் பிரிந்தது.

மரணம் அடைந்த நடிகர் ராஜேசின் உடல், ராமாபுரம் கோத்தாரிநகரில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.அன்றைய தினமே, தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ராஜேஷ் உடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். அவருடன் துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினார்கள்.

வெளிநாட்டில் இருந்து நடிகர் ராஜேஷின் மகள் நேற்று முன்தினம் நள்ளிரவு வந்துவிட்டதால் நேற்று ராஜேஷின் உடல் நல்லடக்கம் செய்ய ஏற்பாடுகள் செயப்பட்டது.

நடிகர் ரஜினிகாந்த் நேற்று ராஜேஷ் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். மதியம் 1 மணியளவில் அமரர் ஊர்தியில் ராஜேஷின் உடல் வைக்கப்பட்டு இறுதி ஊர்வலம் தொடங்கியது. பின்பு அசோக் நகரில் உள்ள வெற்றி சிலுவை சர்ச்சில் ராஜேஷின் உடல் கொண்டு செல்லப்பட்டு அங்கு சிறப்பு இறுதி திருப்பலி செய்யப்பட்டது. தொடர்ந்து கீழ்பாக்கத்தில் உள்ள கல்லறைக்கு அடக்கம் செய்ய ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது. பின்பு அங்கு அவர் ஏற்கனவே கட்டிவைக்கப்பட்ட கல்லறையில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அவர் உயிரோடு இருக்கும் போதே தனது உடல் அடக்கம் இப்படிதான் செயல்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டிருந்தார். ராஜேஷின் அம்மா, அப்பா மற்றும் மனைவி ஆகியோரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள கல்லறையிலே ராஜேஷின் உடலும் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# வங்கிகளில் பொதுமக்கள் நகை கடன் பெற பழைய நடைமுறையை பின்பற்ற வேண்டும்

## தர்மர் எம்.பி. வேண்டுகோள்



பரமக்குடி, ஜூன் 01-

பொதுமக்கள் தங்களது தங்க நகைகளை வங்கிகளில் அடமானம் வைத்து குறைந்த வட்டியில் கடன் பெற்று அவசர தேவைக்கும் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்திற்கும் தொழில் துறைகளுக்கும் அவசர பண தேவைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். இந்நிலையில் வங்கிகள் மற்றும் வங்கி சாரா நிதி நிறுவனங்கள் தனி நபர்களுக்கு தங்க நகை கடன் வழங்குவது தொடர்பாக ரிசர்வ் வங்கி புதிய கட்டுப்பாடுகளை வெளியிட்டுள்ளது. இந்த அறிவிப்பு ஏழை - எளிய மக்களுக்கும் நடுத்தர சாமானிய மக்களுக்கும் பேரிடியாக உள்ளது.

அடமானம் வைக்கப்படும் தங்க நகைகளின் மதிப்பில் 70 சதவீதம் மட்டுமே கடன் வழங்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் நகையை திருப்புவதற்கு பணம் கட்டிய பின்பு ஒரு வார கால அவகாசம் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இது அதிர்ச்சி அளிக்கும் அறிவிப்பாகும். ரிசர்வ் வங்கியின் இந்த அறிவிப்பு கிராமப்புறங்களில் கடும் பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தும். ஆகவே நகைக்கடன் வழங்குவதில் ஏற்கனவே இருந்த நடைமுறையை வங்கிகள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

தற்போது இந்த அறிவிப்பை மத்திய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்பட கூடிய நிதி சேவைகள் துறை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் மத்திய அரசு ரிசர்வ் வங்கிக்கு சில பரிந்துரைகளை வழங்கியுள்ளது. அதன்படி புதிய கட்டுப்பாடுகளில் இருந்து ரூ.2 லட்சம் ரூபாய் வரை சிறிய நகைக்கடன் வாங்குவோருக்கு விளக்கு அளிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. நகை கடன் என்பது அனைத்து தரப்பு மக்களுக்கும் அவசர கால தேவையாக உள்ளது. ஆகவே ரிசர்வ் வங்கி அறிவித்த கட்டுப்பாடுகளில் நடைமுறைகளை தளர்த்தி பழைய நடைமுறையை தொடர அறிவிப்பு செய்ய வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

# நத்தம் – கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது



நத்தம், ஜூன் 01-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் - கோவில்பட்டியில் பிரசித்திபெற்ற கைலாசநாதர் - செண்பகவல்லி அம்மன் கோவில் உள்ளது. இந்த கோவிலின் வைகாசி பெருந்திருவிழா நேற்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முன்னதாக கணபதி ஹோமம் நடத்தப்பட்டு மூலவர் கைலாசநாதர். செண்பகவல்லி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் இந்த திருவிழாவில் தினமும் காலை மற்றும் மாலையில் சுவாமி புறப்பாடு நடைபெறும். இதில் அம்மன் சிம்மம், மயில்,பூதம், அன்னம், யானை, ரிஷப வாகனங்களில் எழுந்தருளி கோவில்பட்டி பகுதிகளில் முக்கிய வீதிகள் வழியாக வந்து நகர்வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருத்தேரோட்டம் ஜூன் மாதம் 8-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு மேல் 8.30 மணிக்குள் நடைபெறுகிறது. மறுநாள் பூப்பல்லாக்கு நிகழ்ச்சி நடக்கிறது. 10-ம் தேதி வியாழக்கிழமை காலை உற்சவ சாந்தி நிகழ்ச்சியுடன் திருவிழா நிறைவுபெறுகிறது. முன்னதாக கொடியேற்ற விழாவில் முன்னாள் எம்.எல்.ஏ ஆண்டிஅம்பலம், முன்னாள் அறங்காவலர் குழு தலைவர்கள் முத்துகுமார்சாமி, சிவலிங்கம்,நத்தம் பேரூராட்சி தலைவர் சேக்சிக்கந்தர் பாட்சா, திமுக ஒன்றிய செயலாளர்கள் ரத்தினக்குமார், பழனிச்சாமி,நகர செயலாளர் ராஜ்மோகன், நகர அவைத் தலைவர் சரவணன்,வ.உ.சி. இளைஞர் பேரவை மாநில கொள்கை பரப்பு செயலாளர் சரவணசெல்வம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை இந்துசமய அறநிலையத்துறை அதிகாரிகளும், கோவில் குருக்களும் செய்து வருகின்றனர்.

## ஆசிய அளவில் நடைபெற்ற கராத்தே போட்டி:

# வெற்றி பெற்ற மாணவ – மாணவிகளுக்கு விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன் பாராட்டு



விருதுநகர், ஜூன் 01-


ஆசிய அளவில் நடைபெற்ற கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் பாராட்டினார்.

சர்வதேச கோஜூ ரியூ கராத்தே டூ ஃபெடரேசன் சார்பில் ஆசிய அளவிலான கராத்தே போட்டி கடந்த 25, 26 ந் தேதி இலங்கை உள்ள சுகந்ததாசா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்த போட்டியில் ஜிதோ காய் கராத்தே சங்கம் சார்பில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

இதில் விருதுநகர் மாவட்டம் எரிச்ச நத்தம் ஊரை சேர்ந்த மாணவி ஷிவானி ஸ்ரீ 2 தங்கம், மற்றும் மித்ரன் 1 தங்கம், 1 வெள்ளியும் ,ஹரிஷ் ராகவ் 1 வெள்ளி, 1 வெண்கலம், மாரிச்செல்வம் 2 தங்கப்பதக்கம், மேலும் 4 மாணவ மாணவிகள் கராத்தே தங்கராஜ் தலைமையில் கலந்து கொண்டுள்ளார். இந்த போட்டியில் எடை பிரிவுகள் வயது பிரிவுகள் என 80போட்டிகள் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 5 தங்கம், 2 சில்வர், 1வென்கலம் பதக்கங்கள் வென்றனர். வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் பாராட்டினார் .

## ராஜபாளைம் அருகே தேவதானம் கோவிலில்

# வைகாசி தேரோட்டம் திருவிழா கொடியேற்றத்துடன் தொடக்கம்





ராஜபாளையம், ஜூன் 01-

ராஜபாளையம் அருகே தேவதானத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்ட நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோவில் உள்ளது. ஆகாய தலமாக விளங்கும் கோவிலில் ஆண்டு தோறும் வைகாசி விசாக திருவிழா 10 நாட்கள் நடைபெறுவது வழக்கம் அதேபோல் நேற்று வைகாசி தேரோட்ட திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இந்த நிகழ்ச்சியை தொடர்ந்து தேன், இளநீர், தயிர், நெய் போன்ற16 வகையான சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றது. பின்னர் சுவாமி மற்றும் அம்பாள் பல்வேறு வாகனங்களில் வீதி உலா நடைபெற உள்ளது. விழாவில் முக்கிய நிகழ்வான தேரோட்டம் வருகிற 8-ந் தேதி நடைபெறும். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் பரம்பரை அறங்காவலர் துரை ரத்தினகுமார், செயல் அலுவலர் முருகன் மற்றும் ஊழியர்கள் செய்து வருகின்றனர்.

## திண்டுக்கல் மாவட்டத்தில்

# பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு ரூ.1 கோடிக்கு ஆடுகள் விற்பனை



திண்டுக்கல், ஜூன். 01-

பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு திண்டுக்கல் அடுத்த கோபால்பட்டி வாரச்சந்தையில் நேற்று ரூ.1 கோடிக்கு ஆடுகள் விற்பனையானது.

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகேயுள்ள கோபால்பட்டியில் வாரந்தோறும் சனிக்கிழமை வாரச்சந்தை நடைபெறுவது வழக்கம். தற்போது மாவட்டம் முழுவதும் கிராமப்புறங்களில் உள்ள கோயில்களில் வைகாசி திருவிழா நடைபெற்று வருகிறது. விழாவில் நேர்த்திக்கடன் செலுத்தவும், திருமணம், காதணி விழா உள்ளிட்ட விசேஷங்களில் அசைவ விருந்து அளிப்பதற்காகவும், ஜூன் 7-ம் தேதி பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு நேற்று வாரச்சந்தையில் வழக்கத்தை விட ஆடுகள் விற்பனை 2 மடங்கு கூடுதலாக விற்பனையாது.

ஆடுகள் வாங்கவும், விற்பனை செய்யவும் திண்டுக்கல், நத்தம், கோசுகுறிச்சி, அய்யலூர் உள்ளிட்ட கிராமங்களில் இருந்து காலை முதலே வியாபாரிகள், மக்கள் அதிகளவில் வந்திருந்தனர். எடைக்கு ஏற்றவாறு ஒரு ஆடு குறைந்தபட்சம் ரூ.5 ஆயிரம் முதல் அதிகபட்சமாக ரூ.20 ஆயிரம் வரை விற்பனையானது. நேற்று ஒரு நாள் மட்டும் ரூ.1 கோடிக்கு மேல் ஆடுகள் விற்பனையானதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## தமிழக ரயில் வளர்ச்சித்திட்டங்களை

# மீண்டும் நடைமுறைப்படுத்த வெங்கடேசன் எம்.பி கோரிக்கை

திருமங்கலம், ஜூன் 01-

முடக்கப்பட்டுள்ள தமிழக ரயில் வளர்ச்சித் திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என சு.வெங்கடேசன் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக ரயில் வளர்ச்சி திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் பிங்க் புத்தகம் சென்ற ஆண்டு நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடிந்த பின் தான் வெளியிட்டனர்.

இந்த ஆண்டு பிங்க் புத்தகத்தையே ஒழித்து விட்டு தொகுக்கப்பட்ட பட்ஜெட் விவரங்கள் என நீண்ட நாள் கழித்து வெளியிட்டார்கள். தமிழக ரயில்வே திட்டங்களுக்கு வெறும் ஆயிரம் ரூபாய் தான் ஒதுக்கி உள்ளார்கள் என்பதை நான் விமர்சித்த பின்பும் எவ்வளவு ஒதுக்கீடு என்பதையே மறைத்து வந்தார்கள்? சில திட்டங்களை சர்வே திட்டத்திற்கு ஏன் மாற்றியுள்ளார்கள் என்று நான் கேள்வி எழுப்பியிருந்தேன்.

தற்போது தெற்கு ரயில்வேயின் பொதுமேலாளர் ரயில்வே வாரியத்துக்கு எழுதிய (மே 14 தேதி) கடிதத்தில் முழு உண்மையும் வெளிவந்துவிட்டது.

இந்த திட்டங்களை அமல்படுத்தாமல் முடக்கவே இந்த குளறுபடிகளை செய்கிறார்கள் என்று நான் விமர்சித்தது உண்மை என்றாகிவிட்டது.

தெற்கு ரயில்வேயின் பொதுமேலாளர் எழுதியுள்ள கடிதத்தில் ரயில்வே வாரியம் 26.9.2019 கடிதம் மூலம் தமிழக ரயில் வளர்ச்சி திட்டங்களை முடக்கியதாகவும் அந்த திட்டங்களுக்கு இப்போது ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் அந்த நிதியை திரும்பவும் சரண்டர் செய்வதாகவும் தெற்கு ரயில்வே கூறி உள்ளது.

திண்டிவனம்- செஞ்சி- திருவண்ணாமலை; அத்திப்பட்டு- புத்தூர் ஆகிய இரு புதிய பாதை திட்டங்களும் ஏற்கனவே முடக்கப்பட்டதாகவும் அதனை விடுவித்தால் தான் பணம் செலவு செய்ய முடியும் என்றும் எனவே இரு திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தலா ரூபா 42.70 கோடியை சரண்டர் செய்கிறோம் என்றும் எழுதியுள்ளார். வேறு சில திட்டங்களை முடக்க பட்டியலில் இருந்து விடுவிக்கவும் கோரி உள்ளார்.

ஈரோடு- பழனி புதிய பாதை திட்டம். இந்தத் திட்டம் செயல்படுத்த முடியாதது என்றும் அதனை கைவிட வேண்டும் என்றும் தெற்கு ரயில்வே கடிதம் எழுதியுள்ளது.

இதற்காக ஒதுக்கிய 52.135 கோடியை சரண்டர் செய்துள்ளார்கள். மதுரை அருப்புக்கோட்டை வழியாக தூத்துக்குடி புதிய பாதை திட்டத்தையே ஏற்கனவே முடக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கான ஒதுக்கீடு ரூ 55.1667 கோடியை சரண்டர் செய்வதாகவும் கூறியுள்ளார்கள். ராமேஸ்வரம்- தனுஷ்கோடி புதிய பாதை திட்டத்தை சுற்றுச்சூழல் காரணமாக கைவிட வேண்டும் என்று தமிழக அரசு கோரி உள்ளது. அதனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாததால் அதற்கான ஒதுக்கீடு ரூபாய் 5.1239 கோடியை சரண்டர் செய்கிறோம் என்றும் கூறியுள்ளார்கள். அதைப்போல மூன்று இரட்டை பாதை திட்டங்களான காட்பாடி -விழுப்புரம்; சேலம்- கரூர்- திண்டுக்கல்; ஈரோடு -கரூர் ஆகியவை இன்னமும் திட்ட தயாரிப்பு கட்டத்தில் தான் உள்ளன எனவே இவற்றுக்கான ஒதுக்கீடு முறையே 200 கோடி 100 கோடி 100 கோடி ஆகியவற்றை செலவு செய்ய முடியாது என்றும் அதனை சரண்டர் செய்கிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த திட்டங்கள் மூன்றும் சர்வேக்கு மாற்றப்பட்டுள்ளது ஏன் என்று நான் கேட்டது இப்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

எனவே தமிழகத்தின் முக்கிய புதிய பாதை மற்றும் இரட்டை பாதை திட்டங்களையும் ஒன்றிய அரசு முடக்கியதை மறைக்கவே பிங்க் புத்தகம் வெளியிடுவதையே தவிர்த்தார்கள்.

தமிழக ரயில் வளர்ச்சி திட்டங்களை ஒன்றிய அரசு முடக்கியுள்ளதை மறைக்க ரயில்வே அமைச்சகம் தமிழக அரசு நிலம் கையகப்படுத்த வில்லை என்று பொய்யான குற்றச்சாட்டு சொன்னதை நாம் பார்த்தோம். தமிழக ரயில் வளர்ச்சி திட்டங்களை முடக்கியதை வன்மையாக கண்டிக்கிறோம். எனவே முடக்கப்பட்ட திட்டங்களை மீண்டும் நடைமுறைப் படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

## ஸ்ரீவில்லிபுத்தூரில்

# வைத்தியநாதசுவாமி கோயில் வைகாசி திருவிழா கொடியேற்றத்துடன் துவக்கம்



விருதுநகர், ஜூன் 01-

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே மடவார் வளாகத்தில் உள்ள சிவகாமி அம்பாள் உடனுறை வைத்தியநாத சுவாமி திருக்கோயில் புகழ்பெற்ற சைவத் திருத்தலமாகும். இந்த கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் திருவிழா சிறப்பாக நடைபெறும். இதில் கொடியேற்றம் பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு சுவாமி அம்பாள் திருக்கல்யாணம் பிச்சாடனர் புறப்பாடு ஆகிய விழாக்கள் சிறப்பாக நடைபெறும். இந்த ஆண்டு மடவார் வளாகம் வைத்தியநாத சுவாமி திருக்கோயில் வைகாசி நேற்று காலை 8 மணிக்கு பூச நட்சத்திரத்தில் மிதுன லக்னத்தில் கொடியேற்றத்துடன் துவங்கியது.

இதனை இதனை முன்னிட்டு சுவாமி அம்பாள் மற்றும் அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகம் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து கோயில் கொடி மரத்திற்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு யாக குண்டம் அமைக்கப்பட்டு வேள்வி பூஜைகள் மகுட ஆகமவிதிமுறைப்படி சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கோயில் சிவாச்சாரியார் ரகு என்ற கைலாசபட்டர் கொடியேற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து ஆகம முறைப்படி பூஜைகளை ரமேஷ் என்ற சுவாமி நாதன் பட்டர், கல்யாண விக்னேஷ் பட்டர், ஆனந்த் விஜய் பட்டர், தியாகராஜ , வைத்தியநாதப் பட்டர் ஆகியோர் பூஜைகளை நடத்தினர். விழாவில் கோயில் செயல் அலுவலர் செ முத்து மணிகண்டன் மற்றும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். தொடர்ந்து சித்திர சபையில் வீற்றிருந்த உற்சவ மூர்த்தி களுக்கும் சிறப்பு தீபாராதனை காட்டப்பட்டது பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து காலை இரவு வேளைகளில் சுவாமி அம்பாள் வீதி உலா நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெறுகிறது. தொடர்ந்து 5ஆம் தேதி பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் 6ஆம் தேதி இரவு 7 மணிக்கு சித்திரை நட்சத்திரத்தில் சுவாமி அம்பாள் திருக்கல்யாணமும் சிறப்பாக நடைபெறுகிறது.7ஆம் தேதி பிச்சாடனர் புறப்பாடு நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை கோயில் தக்கார் செள. சக்கரை அம்மாள் கோயில் செயல் அலுவலர் செ. முத்து மணிகண்டன் கோயில் சிவாச்சாரியார்கள் மற்றும் திருக்கோயில் அலுவலர்களும் கோயில் பணியாளர்களும் சிறப்பாக செய்துள்ளனர்.

# சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் திடீர் தீவிபத்து

## தொழிலாளர்கள் வெளியேறியதால் உயிர்சேதம் தவிர்ப்பு



விருதுநகர், ஜூன் 01-

சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தை அடுத்து தொழிலாளர்கள் உடனே வெளியேறியதால் உயிர்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

சிவகாசி அருகே உள்ள விளாமரத்துபட்டி மாரியம்மாள் என்பவருக்கு சொந்தமான மாரீஸ்வரன் பட்டாசு ஆலை செயல்பட்டு வருகிறது. இந்த ஆலை கடந்த ஆறு மாதங்களாக தற்காலிமாக பட்டாசு உற்பத்தி தடை செய்யப்பட்டதாகும். தற்போது தடைக்காலம் முடிந்து இந்த ஆலையில் கடந்த 5 நாட்களாக மழையின் காரணமாக பட்டாசு உற்பத்தி பணிகள் நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் நேற்று மீண்டும் பட்டாசு உற்பத்தி பணிகள் மேற்கொள்ள தொழிலாளர்கள் வருகை புரிந்தனர். அப்போது பட்டாசு தயாரிக்க பயன்படும் ரசாயன கலவை செய்யும் அறையில் திடீரென் தீ விபத்து ஏற்பட்டது. உடனடியாக அங்கிருந்த தொழிலாளர்கள் ஆலையை விட்டு வெளியேறியதால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது.

ரசாயன கலவையில் ஏற்பட்ட வேதியியல் மாற்றம் காரணமாக அங்கு வைக்கப்பட்டிருந்த ரசாயன மருந்து வெடித்து தீ விபத்து ஏற்பட்டதாக காவல்துறை விசாரணையில் தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் அறிந்து வந்த தீயணைப்புத் துறையினர் அடுத்தடுத்த அறைகளில் தீ பரவாமல் கட்டுப்படுத்தினர்.

# மாற்றுத்திறனாளிகள் விவரங்களை சேகரிக்கும் பணிக்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## விருதுநகர் கலெக்டர் வேண்டுகோள்

விருதுநகர், ஜூன் 01-

தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகளின் மேம்பாட்டிற்காக அரசின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நலத்திட்டங்கள் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று சேரும் வகையில் உலக வங்கி நிதியுடன் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் நமது மாவட்டத்தில் இல்லந்தோறும் சென்று அனைத்து வகை மாற்றுத்திறானாளிகளையும் கண்டறிந்து அவர்களது முழு விவரங்கள் அடங்கிய சமூக தரவு தளத்தை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் நகர்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் முன்களப்பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு நடத்தி மாற்றுத்திறனாளிகள் குறித்த விவரங்களை சேகரிக்கும் பணி நடைபெறவுள்ளது.

கணக்கெடுப்பிற்காக ஏற்கனவே தேர்வு செய்யப்பட்ட சமூக சேவை வழங்கும் நிறுவனங்கள் மூலம் முன்களப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இந்த கணக்கெடுப்புப் பணி ஜூன் 2-ஆம் தேதி துவங்கி வருகிற ஆகஸ்டு மாத இறுதிக்குள் நடத்தி முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது. எனவே, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் நடத்தப்படும் இக்கணக்கெடுப்பிற்காக தங்கள் வீடுகளுக்கு வரும் முன்களப்பணியாளர்களுக்கு பொதுமக்கள் அனைவரும் தகுந்த ஒத்துழைப்பு அளித்து கணக்கெடுப்புப் பணி சிறப்பாக நடைபெற உதவுமாறு மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் கேட்டுக் கொண்டுள்ளார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்



திருமங்கலம் நகர் தெற்குத்தெரு ஸ்ரீவிஷ்ணு துர்க்கை காளியம்மன் திருக்கோவில் 254-ம் ஆண்டு வைகாசி பொங்கல் திருவிழாவை முன்னிட்டு ஏராளமானோர் பங்கேற்ற பால்குடம் எடுத்தல் ஊர்வலம் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை கோவில் கமிட்டி தலைவர் பாண்டியன், செயலாளர், அனிதா பால்ராஜ், பொருளாளர் ஆறுமுகம் செய்திருந்தனர்.



சென்னையில் இருந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரைக்கு வருகை தந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நேற்று மதுரை விமான நிலையத்தில் பொதுமக்கள் மற்றும் கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். அருகில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி உடனிருந்தார்.



மதுரைக்கு வருகை தந்த முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சால்வை அணிவித்து வரவேற்றார்.

# பெருவெற்றியை பெற்றிட பொதுக்குழு கூடிடும் மாமதுரை: முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

மதுரை, ஜூன் 01-

மதுரை பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதையடுத்து முதல்வர் ஸ்டாலின் தந்து எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நேற்று விமானம் மூலம் மதுரை சென்றார். அவர் இன்று மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார். பொதுக்குழுவிற்காக மதுரை உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் சுமார் 30 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்ட அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. முற்றிலும் குளிரூட்டப்பட்ட இந்த அரங்கின் முகப்பு தோற்றம் சென்னை அண்ணா அறிவாலயம் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது. அதில் முதல்வர் மு.க. ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் பிரமாண்ட கட்-அவுட்டுகள் வைக்கப்பட்டுள்ளன. அவர் செல்லும் வழியில் ட்ரோன்கள் மற்றும் ஆளில்லா வான் வழி வாகனங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் கூறுகையில்,"#களம்2026-இல் பெருவெற்றியைப் பெற்றிடப் பொதுக்குழு கூடிடும் மாமதுரை" என்று குறிப்பிட்டிருந்தார். அத்துடன் வீடியோவையும் அவர் வெளியிட்டுள்ளார்.



சென்னை தீவுத்திடலில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் நடைபெறும் "தமிழ்நாடு மீன் உணவு திருவிழாவை திறந்து வைத்து இறால் உணவினை 100 வகையாக சமைக்கும் முறைகள் குறித்த புத்தகத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று வெளியிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் அனிதா ஆர்.இராதாகிருஷ்ணன், பி.கே.சேகர்பாபு, எம்.பி.க்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, எம்.எல்.ஏ.க்கள் ஆர்.மூர்த்தி, அ.வெற்றியழகன், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜோசப் சாமுவேல் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவர்கள் உடனிருந்தனர்.



சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில், 2025-26-ம் ஆண்டு மானிய கோரிக்கை அறிவிப்பு எண். 91-ன்படி, கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முந்தைய கருவின் தன்மையறியும் தொழில்நுட்ப முறைகள் செயல் திட்டத்தை மேம்படுத்தும் வகையில் திறன் மேம்பாட்டு பயிற்சி முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் முதன்மைச்செயலாளர் ப.செந்தில்குமார், டாக்டர்கள் அருண்தம்புராஜ், செல்வவிநாயகம், சங்குமணி ஆகியோர் உள்ளனர்.



சென்னை தீவுத்திடலில் 1,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற மினி மாரத்தான் போட்டியை அமைச்சர்கள் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் மீனவர் நலத்துறை செயலாளர் ந.சுப்பையன், மீன்வளத்துறை ஆணையர் இரா.கஜலட்சுமி, ஆவின் மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.



வயது மூப்பு காரணமாக மறைந்த தமிழக அரசின் தலைமை ஹாஜி கலாவுதீன் முகமது அயூப் வீட்டிற்கு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி நேரில் சென்று அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

# மறைந்த தமிழ்நாடு அரசு தலைமை காஜி குடும்பத்தினரை சந்தித்து இ.பி.எஸ். ஆறுதல்

சென்னை, ஜூன் 01-

மறைந்த தமிழ்நாடு அரசு தலைமை காஜி குடும்பத்தினரை நேரில் சந்தித்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆறுதல் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு தலைமை காஜி முனைவர் சலாவுதீன் முகம்மது அயூப் சாகிப்வயது முதிர்வு காரணமாக காலமானார்.

இதையொட்டி அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி. பழனிசாமி சென்னை ராயப்பேட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்று சலாவுதீன் முகம்மது அயூப் சாகிப் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

இந்நிகழ்வின்போது, அ.தி.மு.க. அமைப்புச் செயலாளரும், தென் சென்னை வடக்கு (கிழக்கு) மாவட்ட செயலாளருமான ஆதிராஜாராம், முன்னாள் அமைச்சர் அப்துல் ரஹீம், அதிமுக சிறுபான்மையினர் நலப் பிரிவு துணைச் செயலாளர் ஜவஹர் அலி, சிறுபான்மையினர் நலப் பிரிவு துணைச் செயலாளர் ஆலந்தூர் பகீம் ஆகியோரும் உடன் இருந்தனர்.

# இந்தியாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2,710 ஆக அதிகரிப்பு

புதுடெல்லி, ஜூன் 01-

இந்தியாவில் தற்போது கொரோனா பாதிப்புக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 2,710 ஆக உயர்ந்துள்ளது. மேலும், கடந்த 24 மணி நேரத்தில் 7 பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர்.

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் சமீபத்திய தரவுகளின்படி, இந்தியாவில் கோவிட்-19 பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 2,710 ஆக உயர்ந்துள்ளது.

இதில் பெரும்பாலான தொற்றுகள் கேரளாவில் உள்ளன. கடந்த இரு ஆண்டுகளாக பாதிப்புகள் குறைவாக இருந்த நிலையில் இந்தியாவில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகிறது.

தற்போதைய நிலவரப்படி, கேரளாவில் 1,147 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து மகாராஷ்டிராவில் 424 பேர், டெல்லியில் 294 பேர் மற்றும் குஜராத்தில் 223 பாதிக்கப்பட்டுள்ளனர்.

கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டில் தலா 148 பேரும், மேற்கு வங்கத்தில் 116 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் ஏழு பேர் கொரோனா பாதிப்பால் உயிரிழந்துள்ளனர்.

இதனால் இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் பலி எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில், மகாராஷ்டிராவில் இரண்டு இறப்புகள் பதிவாகியுள்ளன. டெல்லி, குஜராத், கர்நாடகா, பஞ்சாப் மற்றும் தமிழ்நாட்டில் தலா ஒருவர் உயிரிழந்துள்ளனர்.

இரண்டு புதிய ஓமிக்ரான் துணை வகைகளான எல்எப்.7 மற்றும் என்பி.1.8 ஆகியவை கொரோனா பாதிப்பு திடீரென அதிகரிக்க காரணமாகியுள்ளது. இருப்பினும் ஜேஎன்.1 நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் பாதிப்பாக இப்போது உள்ளது.

## வெள்ளப்பெருக்கு காரணமாக

# குற்றால அருவிகளில் குளிக்க 7-வது நாளாக தொடரும் தடை

நெல்லை, ஜூன். 01-

குற்றால அருவிகளில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் தென் மேற்கு பருவமழை தொடங்கி தீவிரமாக பெய்து வருகிறது. தமிழகத்திலும் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது.இதன் காரணமாக நெல்லை, தென்காசி மாவட்டங்களில் சாரல் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து, நீர்மட்டமும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கடந்த 6 நாட்களாக குற்றாலம் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக குற்றாலம் அருவிகளில் வெள்ளப்பெருக்கு நீடித்து வருகிறது. இந்த நிலையில் , பாதுகாப்பு கருதி அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள் குளிக்க 7-வது நாளாக நேற்றும் தடை விதிக்கப்பட்டது.

# பச்சிளம் குழந்தை விரல் துண்டிப்பு: செவிலியர் மீது வழக்குப்பதிவு

வேலூர், ஜூன் 01-

வேலூரில் செவிலியரின் அலட்சியத்தால் பச்சிளம் குழந்தையின் விரல் துண்டிக்கப்பட்ட விவகாரத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

வேலூர் மாவட்டத்தில் முள்ளிப்பாளையத்தை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநரான விமல்ராஜ் மற்றும் அவரது மனைவி நிவேதா தம்பதியருக்கு, அடுக்கம்பாறையிலுள்ள அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மே 24 ஆம் தேதியில் ஆண் குழந்தை பிறந்தது. இருப்பினும், பேறுகால சிகிச்சைக்காக தாய். சேய் இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், வெள்ளிக்கிழமையில் (மே 30) குளுக்கோஸ் பாட்டிலில் இருந்த ஊசியை மாற்றுவதற்காக, குழந்தையின் கையில் ஒட்டப்பட்டிருந்த பிளாஸ்திரியை அகற்றும்போது, அதனை செவிலியர்களின் கைகளால் அகற்றாமல், கத்தரிக்கோலால் வெட்டி அகற்ற முயன்றனர்.

இதன்போது, எதிர்பாராத விதமாக, 6 நாள் பச்சிளம் குழந்தையின் வலது கட்டை விரலுடன் சேர்த்து வெட்டி விட்டனர். குழந்தையின் விரல் துண்டிக்கப்பட்ட சம்பவத்தையடுத்து, மருத்துவமனை நிர்வாகத்தை குழந்தையின் குடும்பத்தினர் முற்றுகையிட்டு, வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

செவிலியரின் அலட்சியத்தால் குழந்தையின் விரல் துண்டிக்கப்பட்டதை தொடர்ந்து, குழந்தையின் கையில் அறுவைச் சிகிச்சை செய்வதற்காக, துண்டிக்கப்பட்ட விரலுடன் குழந்தையை சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு மருத்துவமனை நிர்வாகம் அனுப்பி வைத்தது. இந்த சம்பவம் தொடர்பாக, காவல்துறையினர் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட பொறுப்பாளர்கள், தொகுதி பொறுப்பாளர்கள் மற்றும் பகுதி செயலாளர்கள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.